# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2015 – 2016

## மானியக் கோரிக்கை எண்.44

**ப. மோகன்**
ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு 2015

# உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | முகவுரை | 1 |
| 2. | தொழில் வணிக ஆணையரகம் | 5 |
| 3. | தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) | 43 |
| 4. | தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) | 75 |
| 5. | தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் | 80 |

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2015–2016

### 1. முகவுரை

உலக அளவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆரம்ப நிலையில் மிக சிறிய அளவில் வர்த்தக நோக்குடன் தொடங்கப்பட்டு எதிர் காலத்தில் உலக அளவில் பெரிய நிறுவனங்களுடன் வர்த்தக போட்டியிடும் அளவிற்கு திறனை உருவாக்கியுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெரிய நிறுவனங்களின் திறனை உள்ளடக்கி உலக அளவில் தொழில் நுட்பம் மற்றும் முதலீட்டில் பங்குதாரர்களாக மாறி வரும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

### 1.1 இந்திய பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

இந்திய பொருளாதாரத்தில் கடந்த 50 ஆண்டுகளில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அதிவேக மற்றும் ஆற்றல் வாய்ந்த தொழில் நிறுவனங்களாக மாறியுள்ளது. மேலும் இக் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் குறைந்த முதலீட்டில் தொழில் நிறுவனங்களை உருவாக்கி ஊரக மற்றும் நகர் புற பகுதிகளில் அதிக அளவில் வேலை வாய்ப்பினை உருவாக்குவதில் பெரும் பங்களிப்பினை செய்துள்ளன. மேலும், வட்டார அளவில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை குறைத்து நாட்டின் வருவாய் மற்றும் வளம் சம அளவில் இருக்க உதவுகிறது. குறு, சிறு மற்றும்

நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு சார்பு நிறுவனங்களாக இருப்பதோடு நாட்டின் பொருளாதார சமூக வளர்ச்சியிலும் பெரும் பங்கு வகிக்கிறது.

2012 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நான்காவது அகில இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் கணக்கெடுப்பில் இந்தியாவில் உள்ள 3.6 கோடி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் சுமார் 8 கோடி நபர்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர். இதில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், உற்பத்தி நிறுவனங்களின் பங்கு சுமார் 7.09 விழுக்காடு ஆகும். சேவை துறையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு சுமார் 30.50 விழுக்காடு ஆகும். மேலும் உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு 37.59 விழுக்காடு ஆகும்.

## 1.2 தமிழ் நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஏறத்தாழ அனைத்து பிரிவுகளிலும் பல்வேறு விதமான பொருட்களை தயாரிக்கிறது. இவற்றில் முன்னிற்பவை ஜவுளி, மின்னணு பொருட்கள், பொறியியல் பொருட்கள், தானியங்கி உப பொருட்கள், தோல் பொருட்கள், இரசாயனம், நெகிழி பொருட்கள் (பிளாஸ்டிக்), ஆயத்த ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் முதலானவை

தமிழ்நாட்டில் www.msmeonline.tn.gov.in எனும் இணையதளம் வாயிலாக தொழில் முனைவோர் ஒப்புதல்

பதிவறிக்கை பகுதி–IIஐ பதிவு செய்யும் முறை நடைமுறைப்படுத்தப்படுள்ளது. இந்த முறை அறிமுகப்படுத்தியப் பின் சுமார் **5.80** இலட்சம் தொழில் முனைவோர்களால் ஒப்புதல் பதிவறிக்கை பகுதி II பதிவு செய்யப்பட்டு, சுமார் **33.26** இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. மொத்த முதலீடு ரூ. **74,662.27** கோடி ஆகும்.

கீழ்க்கண்ட அட்டவணை **1**–ல் கடந்த எட்டு ஆண்டுகளில், வருடாந்திர குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பதிவு விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 1**

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | முதலீட்டு அளவு (ரூபாய் கோடியில்) | உற்பத்தி அளவு (ரூ.கோடியில்) | வேலை வாய்ப்பு (எண் ணிக்கை) |
|---|---|---|---|---|
| 2007–08 | 27209 | 2547.14 | 8739.95 | 242855 |
| 2008–09 | 32049 | 3557.89 | 13354.86 | 294255 |
| 2009–10 | 41799 | 3214.22 | 10880.01 | 151743 |
| 2010–11 | 57902 | 5872.37 | 12500.86 | 405233 |
| 2011–12 | 70758 | 7429.59 | 15496.00 | 502381 |
| 2012–13 | 83348 | 8751.54 | 17503.08 | 583436 |
| 2013–14 | 116393 | 18939.87 | 16832.25 | 494990 |
| 2014–15 | 143104 | 24349.65 | 59789.70 | 651180 |

## 1.3 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வரையறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வகைபாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு சட்டம் 2006-ன் படி வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி இந்நிறுவனங்களை இயந்திரம் மற்றும் தளவாடங்களின் (நிலம் மற்றும் கட்டடங்கள் தவிர) முதலீட்டின்படி வரையறுக்கப்பட்டது அட்டவணை-2-ல் கொடுக்கப்பப்பட்டுள்ளது.

**அட்டவணை - 2**

| உற்பத்தி நிறுவனங்கள் | முதலீட்டின் அளவு | சேவை நிறுவனங்கள் | முதலீட்டின் அளவு |
|---|---|---|---|
| குறு நிறுவனங்கள் | ரூ.25 இலட்சம் வரை | குறு நிறுவனங்கள் | ரூ.10 இலட்சம் வரை |
| சிறு நிறுவனங்கள் | ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.5 கோடி வரை | சிறு நிறுவனங்கள் | ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ. 2 கோடி வரை |
| நடுத்தர நிறுவனங்கள் | ரூ.5 கோடிக்கு மேல் ரூ.10 கோடி வரை | நடுத்தர நிறுவனங்கள் | ரூ.2 கோடிக்கு மேல் ரூ.5 கோடி வரை |

## 1.4 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

இத்துறையில் நிர்வாக கட்டுப்பாட்டில் கீழ்கண்ட அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

- தொழில் வணிக ஆணையரகம் (IC & DIC)
- தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO)
- தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI)
- தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (EDI)

## 2. தொழில் வணிக ஆணையரகம்

தொழில் வணிக ஆணையரகம் பொதுவாக தொழில்களின் மேம்பாட்டிற்கும் குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டிற்கும் கட்டாய பொறுப்பாக விளங்குகிறது. இந்த கட்டாய பொறுப்பை செயல்படுத்த இவ்வாணையரகத்தின் கீழ் 32 மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. தொழில் துவங்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு மாவட்ட தொழில் மையங்கள், தொழில் நடவடிக்கைகளை கண்டறிதல், திட்ட அறிக்கை தயாரித்தல், பல்வேறு வங்கிகள்/நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறுதல், அரசுத் துறைகளிடமிருந்து சட்ட பூர்வ அனுமதிகளை பெறுதல், தகுதியான மானியங்களை பெற்றுத் தருதல் மற்றும் நிலுவையிலுள்ள தொகைகளை பெற்று தருதல் உள்ளிட்டப் பணிகளைச் செய்து வருகின்றன.

## 2.1 தொழில் முனைவோர் பதிவறிக்கை பதிவு செய்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டுச் சட்டம் 2006ன்படி தொழில் முனைவோர் பதிவறிக்கை (தொ.ப.) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறு மற்றும் சிறு உற்பத்தி / சேவை தொழில்கள் விருப்பத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது. ஆயினும், நடுத்தரத் தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு இப்பதிவு கட்டாயமானது. எந்த ஒரு தொழில் முனைவோரும் www.msmeonline.tn.gov.in இணையதள வழியாக தொழில் முனைவோர் பதிவறிக்கை ஒப்புகையினை மாவட்ட தொழில் மையத்திற்கு செல்லாமலே உடனடியாக பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டமானது தொழில் முனைவோரிடமிருந்து மிகுந்த வரவேற்பினை பெற்றுள்ளது. மேலும் 2014–15ல் தொழில் முனைவோர் ஒப்புதல் பதிவறிக்கை இணையதளம் வாயிலாக மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. இணையதளம் மூலம் தொழில் முனைவோர் பதிவறிக்கை ஒப்புகை வழங்கப்பட்டதின் போக்கு அட்டவணை –3ல் கொடுக்கப்பட்டுள்ளது. 31.03.2015 வரையில் தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி I–இல் 5,27,952 நிறுவனங்களும், பகுதி II–இல் 4,65,286 நிறுவனங்களும் இணையதளம் வாயிலாக பதிவு செய்துள்ளன.

**அட்டவணை – 3**

| வருடம் | தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி – 1 | | | | தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி – 2 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அலுவலகம் மூலமாக | இணைய தளம் மூலமாக | மொத்தம் | இணைய தளம் மூலம் பதிவு செய்யப் பட்ட தொழில் முனைவோர் ஒப்புதல் பதிவறிக்கை சதவீதம் | அலுவலகம் மூலமாக | இணைய தளம் மூலமாக | மொத்தம் | இணைய தளம் மூலம் பதிவு செய்யப்பட்ட தொழில் முனைவோர் பதிவு அறிக்கை சதவீதம் |
| 2007-08 | 35072 | - | 35072 | 0.00 | 27209 | - | 27209 | 0.00 |
| 2008-09 | 22037 | 21395 | 43432 | 49.30 | 22642 | 9407 | 32049 | 29.40 |
| 2009-10 | 11711 | 55177 | 66888 | 82.50 | 10673 | 31126 | 41799 | 74.50 |
| 2010-11 | 12059 | 65760 | 77819 | 84.50 | 16514 | 41388 | 57902 | 71.50 |
| 2011-12 | 9999 | 73935 | 83934 | 88.10 | 18867 | 51891 | 70758 | 73.34 |
| 2012-13 | 9997 | 84819 | 94816 | 89.50 | 16457 | 74517 | 90974 | 81.91 |
| 2013-14 | 1442 | 107519 | 108961 | 98.68 | 2540 | 113853 | 116393 | 97.82 |
| 2014-15 | 0 | 119347 | 119347 | 100.00 | 0 | 143104 | 143104 | 100.00 |
| மொத்தம் | 102317 | 527952 | 630269 | 83.77 | 114902 | 465286 | 580188 | 80.20 |

## 2.2 மானியத் திட்டங்கள்

மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் சலுகைத் திட்டங்கள் கீழ்வருமாறு:

**i. முதலீட்டு மானியம்**

- தகுதியான இயந்திரத் தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு முதலீட்டு மானியம் அதிகப்பட்சமாக ரூ.30 இலட்சம் வரை.

- மகளிர், பட்டியலிடப்பட்ட இனம் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர் தொழில் முனைவோராக இருக்கும் நேர்வுகளில் அவற்றின் தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் மதிப்பில் 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.2 இலட்சம், கூடுதல் முதலீட்டு மானியம்.

- மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு மாசுக்கட்டுப் பாட்டு வாரியச் சான்றின் பேரில் அந்நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் 25 விழுக்காடு அதிகபட்சம் ரூ.3 இலட்சம் கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

- உற்பத்தி தொடங்கிய நாளிலிருந்து முதல் 5 ஆண்டுகளில் மூன்று ஆண்டுகளுக்குள், குறைந்தபட்சம் 25 வேலையாட்களைப் பணியில் ஈடுபடுத்தும் நிறுவனங்களுக்கு அவற்றின் தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் மதிப்பில்

5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வேலைவாய்ப்பு பெருக்க மானியம்

அடிப்படைத் தகுதி

- மாநிலத்தில் எப்பகுதியில் நிறுவப்படும், அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்.

- தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் நிறுவப்படும் கீழ்க்கண்ட 13 சிறப்பு உற்பத்தி தொழில் நிறுவனங்கள் (கூடுதல் முதலீட்டு மானியம் மற்றும் வேலைவாய்ப்பு பெருக்க மானியம் நீங்கலாக)

    - மின் மற்றும் மின்னணு பொருள்கள்
    - தோல் மற்றும் தோல்பொருள்கள்
    - வாகன உதிரி பாகங்கள்
    - மருந்து மற்றும் மருத்துவ பொருள்கள்
    - சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள்
    - ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள்
    - மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்கள்
    - விளையாட்டுப் பொருள்கள் மற்றும் உதிரிபாகங்கள்
    - சிக்கன கட்டுமானப் பொருள்கள்
    - ஆயத்த ஆடைகள்
    - உணவு பதப்படுத்துதல்
    - பிளாஸ்டிக்
    - ரப்பர் பொருட்கள்

- தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய 251 வட்டாரங்களில் அமைக்கப்படும் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்.

- மாநிலத்தின் 385 வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளான் சார் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்.

- மேற்கண்ட வகையை சார்ந்த தற்போது இயங்கி வரும் நிறுவனங்கள் விரிவாக்கம் மற்றும் மாற்றுத் தொழில்கள் துவங்கும் பொழுது.

**ii. குறைந்தழுத்த மின் மானியம்**

20 விழுக்காடு குறைந்த அழுத்த மின் மானியம், வணிக ரீதியாக உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின்இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து 36 மாதங்களுக்கு வழங்கப்படும்.

அடிப்படைத் தகுதி

- மாநிலத்தில் எப்பகுதியில் நிறுவப்படும், அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்.

- மாநிலத்தின் 385 வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளான் சார் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்.

- தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய 251 வட்டாரங்களில் அமைக்கப்படும் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்.

➢ மேற்கண்ட வகையை சார்ந்த தற்போது இயங்கி வரும் நிறுவனங்கள் விரிவாக்கம் மற்றும் மாற்றுத் தொழில்கள் துவங்கும்பொழுது

**iii. மதிப்பு கூட்டு வரிக்கு ஈடான மானியம்**

குறு உற்பத்தி நிறுவனங்களுக்கு, அவற்றின் இயந்திர தளவாடங்களின் மதிப்புக்கு ஈடான தொகை, அவை உற்பத்தி தொடங்கிய முதல் 6 ஆண்டுகளில் செலுத்தப்படும் மதிப்பு கூட்டு வரிக்கு ஈடாக அவர்களுக்கு 100 சதவிகிதம் திருப்பி வழங்கப்படும்.

அடிப்படைத் தகுதி

மாநிலத்தில் எப்பகுதியில் நிறுவப்படும், அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்.

**iv. மின்னாக்கி மானியம்**

இம்மானியத் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் எப்பகுதியிலும் அமைந்துள்ள குறு சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் வாங்கியுள்ள மின்னாக்கியின் மதிப்பில் 25 விழுக்காடு (320 KVA வரை) அதிகபட்சமாக ரூ. 5 இலட்சம் வரை மின்னாக்கி மானியம்

**v. பின்முனை வட்டி மானியம்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உற்பத்தி நிறுவனங்கள் தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப் படுத்துதல், கடன் உத்தரவாத நிதி ஆதாரத் திட்டம்

ஆகியவற்றிற்காக வாங்கும் ரூ.1 கோடி வரையிலான கடன்களின் மீது 5 ஆண்டுகளுக்கு அதிகபட்சமாக ரூ. 10 இலட்சத்திற்கு கடனுக்கான வட்டியில் 3 விழுக்காடு என்ற அளவில் பின்முனை வட்டி மானியமாக வழங்கப்படுகிறது.

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் நவீன படுத்துதல், தேசிய பங்கு நிதி திட்டம், சர்வதேச தரநிலைப்படுத்தல் நிறுவனத்தின் (ISO) தரச்சான்று பெறுதல், காப்புரிமை மற்றும் அறிவுசார் சொத்துரிமை பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் கடன் உத்தரவாத நிதி ஆதாரத் திட்டம் போன்ற அனைத்து திட்டங்களுக்கான காலக்கடன்களுக்கும், 3 விழுக்காடு பின்முனைவட்டி மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

## 2.3 தொழில் நுட்ப மேம்பாட்டுக்கான திட்டங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக கீழ்கண்ட திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன:-

- உரிமைக்காப்பு (கண்டறிதல் உரிமை) பதிவு விண்ணப்பத்திற்கான தொகையில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் 50 விழுக்காடு, அதிக பட்சமாக ரூ.2 இலட்சம் மானியம்.

- வர்த்தக குறியீடு பதிவு தொகையில் 50 விழுக்காடு அல்லது ரூ.25,000/– இதில் எது குறைவானதோ.

- அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சியின் மூலம் தொழில் குழுமங்கள் மற்றும் சிறு கருவி மையங்கள் அமைப்பதற்கு, அவற்றின் திட்டமதிப்பீட்டில் 25 விழுக்காடு, அதிக பட்சமாக ரூ.1 கோடி வரை மானிய உதவி.

- தூய்மையான, மின் திறனுள்ள தகவல் தொழில் நுட்பம் சார்புடைய தொழில் நுட்பங்களை உருவாக்குவதற்கு தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி ஏற்படுத்துதல்

- நேர்த்திமிகு மையங்கள் மற்றும் தொழில் நுட்ப வணிக சேவை வளர்ப்பகங்களை உருவாக்கி அதன் மூலம் நவீன உற்பத்தி உத்திகள் மற்றும் வடிவமைப்பு மேம்பாடு மேற்கொள்ள ஒவ்வொரு தொழில்நுட்ப வணிக சேவை வளர்ப்பகம் / நேர்த்திமிகு மையத்திற்கும் ரூ.50 இலட்சம் வரை மானிய உதவி.

## 2.4 சந்தை வாய்ப்பு உதவி

அரசு, குறு மற்றும் சிறுதொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட சந்தை வாய்ப்பு உதவிகளை வழங்குகிறது.

- ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்வதற்கு முன்வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு

- இம்மாநிலத்திலும் மற்றும் மற்ற மாநிலங்களிலும் நடைபெறும் பொருட்காட்சிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் சார்புடைய சங்கங்கள் கலந்து கொள்ளும் நேர்வுகளில் அரங்க வாடகையில் 50 விழுக்காடு மானியம்

- பொதுவான பெயர் அல்லது பொது வணிக சின்னத்தில் விற்பனை செய்ய ஆதரவு அளித்தல்

## 2.5 பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் எனும் திட்டத்தை 2008–09ஆம் ஆண்டு முதல் மைய அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் உற்பத்தி தொழில்களுக்கு அதிகபட்சமாக ரூ.25 இலட்சம், சேவை தொழில்களுக்காக ரூ.10 இலட்சம் வரையிலும் அதிக பட்சமாக வழங்கப்படுகிறது.

திட்ட மதிப்பீட்டில் தனது பங்களிப்பாக பொது பிரிவில் 10 விழுக்காடும், சிறப்பு பிரிவினர் (பட்டியலிடப்பட்ட இன/பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மை இனத்தினர், மகளிர்/முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், வடகிழக்கு பகுதியினர் மலை மற்றும் எல்லைப் பகுதியினர்) 5 விழுக்காடும் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகையினை வங்கிகள் காலக் கடனாக வழங்கும். மைய அரசானது மானியங்களை பயனாளிகளுக்கு அட்டவணை–4ன் படி வழங்குகிறது.

**அட்டவணை – 4**

| பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளின் வகை | மானிய விகிதம் | |
|---|---|---|
| | **நகர்புறம்** | **கிராமப்புறம்** |
| பொதுப்பிரிவினர் | 15% | 25% |
| சிறப்புப் பிரிவினர் (பட்டியலிடப்பட்ட இனம்/பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மை இனத்தினர், மகளிர்/முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், வடகிழக்கு பகுதியினர் மலை மற்றும் எல்லைப் பகுதியினர்) | திட்ட மதிப்பீட்டில் 25% | திட்ட மதிப்பீட்டில் 35% |

## 2.6 வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

தமிழக அரசு சமுதாயத்தில் பின் தங்கியுள்ளவர்களை முன்னேற்ற வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. இத்திட்டம் மூலம் உற்பத்தி/சேவை/வியாபார நிறுவனங்கள் அதிகபட்சம் முறையே ரூ.5 இலட்சம்/ரூ.3 இலட்சம் மற்றும் ரூ.1 இலட்சம் வரையான திட்டங்களுக்கு பொருந்தும். அட்டவணை–5ல் குறிப்பிட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில்

திட்ட மதிப்பீட்டில் **25** விழுக்காடு அரசு மானியம் வழங்கப்படுகிறது.

**அட்டவணை – 5**

| தகுதிகள் | |
|---|---|
| குறைந்தபட்ச வயது வரம்பு | 18 வயது |
| அதிகபட்ச வயது வரம்பு | 45 வயது வரை சிறப்பு பிரிவினர்களுக்கு (தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர்/பிற்படுத் தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பெண்கள்/ முன்னாள் இராணுவத்தினர்/மாற்றுத் திறனாளிகள்/திருநங்கைகள்) |
| கல்வித்தகுதி | 8ம் வகுப்பு தேர்ச்சி |

## 2.7 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

தமிழக அரசின் தலைமை திட்டமான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் **20.02.2013** அன்று துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், படித்த இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளித்தல், தொழில் தொடங்க திட்டங்கள் தயாரித்தல், நிதி நிறுவனங்களின் நிதியுதவி பெற உதவுதல் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுடன் வணிக தொடர்பு அமைத்து தருதல் ஆகிய உதவிகளை அளித்து அவர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவாக்கும் நோக்குடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் அட்டவணை–6-ல் குறிப்பிட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில் உற்பத்தி மற்றும் சேவை தொழில்கள் துவங்குவதற்கு 25 விழுக்காடு முதலீட்டு மானியத்துடன் (அதிகப்படியாக ரூ.25 இலட்சம்) கடனுக்கான வட்டியில் 3 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் குறைந்தப்பட்ச திட்ட மதிப்பீடு ரூ.5 இலட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும். பயனாளிகள் பங்குத்தொகை பொதுப் பிரிவினருக்கு திட்டமதிப்பீட்டில் 10 விழுக்காடும் சிறப்புப் பிரிவினருக்கு 5 விழுக்காடும் ஆகும். தகுதி விபரம் அட்டவணை–6ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### அட்டவணை–6

| தகுதிகள் | |
|---|---|
| வயது | குறைந்த பட்ச வயது 21 மற்றும் அதிகப்பட்ச வயது பொதுப் பிரிவினருக்கு 35க்கு மிகாமலும், சிறப்பு பிரிவினருக்கு 45க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் |
| கல்வித்தகுதி | பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு / ஐடிஐ/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் தொழிற்சார் பயிற்சி பெற்று இருத்தல் வேண்டும். |
| | முதல் தலைமுறை தொழில் முனைவோராக இருக்க வேண்டும். |

## 2.8 மாவட்டத் தொழில் நிறுவன வளர்ச்சி ஆலோசனை குழு

தமிழகத்தில் தொழில் தொடங்க முன் வரும் தொழில் முனைவோர்களுக்கு தேவையான தொழில் உரிமங்கள் மற்றும் அனுமதிகள் மாவட்டத் தொழில் மையத்தில் செயல்படும் ஒரு முனை தீர்வுக் குழு விரைந்து பெற்று அளித்திட ஆதரவளிக்கிறது.

அரசு இந்த ஒரு முனைத் தீர்வு குழுவினை சீரமைக்கவும் வலுவூட்டவும் மாவட்ட தொழில் நிறுவன மேம்பாட்டு ஆலோசகக் குழுவினை அமைத்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள தொழில்களை அமைக்கத் தேவையான அனுமதிகள் மற்றும் உரிமங்கள் பெறுவதற்கு நிறுவனங்கள் அனைத்து விண்ணப்பங்களையும் குறிப்பிடப்பட்ட பொது விண்ணப்பப் படிவத்தில் பொது மேலாளர், மாவட்ட தொழில் மையத்திற்கு அனுப்ப வேண்டும். இதன் மூலம் தொழில் தொடங்கிட தேவையான உரிமங்கள் மற்றும் அனுமதிகள் சம்மந்தப்பட்ட துறையின் மூலம் **60** நாட்களுக்குள் வழங்கப்படவில்லையெனில் மேற்கண்ட விண்ணப்பங்கள் மாவட்ட தொழில் நிறுவன ஆலோசனை குழு கூட்டத்தில் வைக்கப்பட்டு விரைந்து தீர்வு காணப்பட்டு வருகின்றன. **2014–15**ஆம் ஆண்டு **695** விண்ணப்பங்கள் பெறப்பட்டதில், **649** விண்ணப்பங்களுக்கு உரிய தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

## 2.9 நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை புனரமைத்தல்

நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை புனரமைக்க உதவும் நோக்கத்துடன் பாரத

ரிசர்வ் வங்கியால், ஒரு மாநில அளவிலான நிதி நிறுவனங்களுக்கிடையிலான குழு(SLIIC) அமைக்கப் பட்டுள்ளது. இக்குழு காலாண்டுக்கு ஒரு முறை கூட்டப்பட்டு நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை புனரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையினை ஆய்வு செய்து இக்குழுவின் துணைக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான புனரமைப்பு உதவிகளை முடிவு செய்யும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளரின் தலைமையில் இக்குழு காலாண்டுகளுக்கு ஒரு முறை கூடுகின்றது. பாரத ரிசர்வ் வங்கியால் நடத்தப்படும் நலிவுற்ற நிறுவனங்களின் ஆய்வறிக்கையின் பேரில் வங்கிகள் நலிவுற்ற நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குவதோடு அவை சந்தித்து வரும் இடர்பாடுகளை நீக்க தேவையான உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி வருகின்றன.

அரசு, நலிவுற்ற நிறுவனங்களின் புனரமைப்பை மேற்கொள்ள தீர்வு நடவடிக்கைகளை எடுத்துரைக்க ஏதுவாக அவற்றின் பிரச்சனைகளையும் நலிவுற்ற தன்மையின் தீவிரத்தையும் ஆராய்வதற்காக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் செயலர் தலைமையில் மாநில அளவிலான புனரமைப்புக்குழு (SLRC) ஒன்றை அமைத்துள்ளது. நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் புனரமைப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும் இக்குழு காலாண்டு அடிப்படையில் கூட்டங்களை நடத்த வேண்டும்.

## 2.10 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிதி உதவி

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் வணிக வங்கிகளிடமிருந்து கடனுதவி பெறுகின்றன. இம்மாநிலத்தில் ஏப்ரல் 2014 முதல் டிசம்பர் 2014 வரையிலான காலத்தில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு முறையே ரூ.15330.69 கோடியும், ரூ.12721.51 கோடியும், ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 2014 முதல் டிசம்பர் 2014 வரை ரூ. 28052.20 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு டிசம்பர் 2014 வரை மொத்தம் வழங்கப்பட்ட முன்பணத்தொகையில் குறுந் தொழில்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட முன்பணத்தொகை 54.65 விழுக்காடு ஆகும்.

## 2.11 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்கள்

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து தாங்கள் விற்பனை செய்த பொருள்களுக்கு உண்டான தொகையை கால தாமதமின்றி உடன் பெற்றுத்தருதல் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006ன் நோக்கங்களில் ஒன்றாகும்.

அதற்கிணங்க அரசு சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது.

## 2.12 சோதனை சேவைகள்

தொழில் நிறுவனங்களுக்கு தேவையான பரிசோதனை மற்றும் சான்றிதழ் வழங்கி கீழ்கண்ட ஆய்வுக்கூடங்கள் சேவை செய்து வருகின்றன.

- மத்திய மின் பரிசோதனை மையம், காக்களூர், திருவள்ளூர் மாவட்டம்
- இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், கிண்டி மற்றும் மண்டல சோதனை ஆய்வுக்கூடங்கள் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி.

## 2.13 திறன் அளித்தல்

கீழ்காணும் பயிற்சி நிலையங்கள் தொழிநுட்பத் திறன்களை மேம்படுத்துவதற்கு ஏற்ப சான்றிதழ்கள் மற்றும் பட்டய படிப்புக்களைவ ழங்குகிறது.

### 2.13.1 அரசு தொழில்நுட்பப் பயிற்சி மையம், கிண்டி, சென்னை

1962ஆம் ஆண்டில் கிண்டி, சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட அரசு தொழில்நுட்ப பயிற்சி மையம் கீழ்காணும் மூன்றாண்டு பட்டயப்படிப்புகளை வழங்கி வருகிறது.

- இயந்திரவியல் பொறியியல் பட்டயம் (கருவி மற்றும் அச்சு)
- இயந்திரவியல் பொறியியல் பட்டயம் (குளிர்சாதனம் மற்றும் காற்று பதனம்)

அகில இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவன அங்கிகாரத்துடன் நடத்தப்படும் மேற்கண்ட பட்டய படிப்புகள் மூலம் ஆண்டு ஒன்றிற்கு தோராயமாக 100 பட்டய படிப்பு மாணவர்களை இப்பயிற்சி நிறுவனம் உருவாக்குகிறது.

**2.13.2 கருவி பொறியியல் பயிலகம், திண்டுக்கல்**

1961ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பயிலகம் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக, 3 ஆண்டு கருவி மற்றும் அச்சு பட்டய படிப்பை வழங்கி வருகின்றது. அகில இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற இப்பயிலகம் ஆண்டு ஒன்றிற்கு தோராயமாக 44 பட்டயபடிப்பு மாணவர்களை உருவாக்குகிறது.

**2.13.3 பீங்கான் தொழில்நுட்பப்பயிற்சி நிலையம், விருத்தாச்சலம்**

அரசு தொழில்நுட்ப கல்வி துறையின் அங்கீகாரம் பெற்ற இப்பயிற்சி நிறுவனம் 3 ½ ஆண்டுகள் கால அளவு கொண்ட பீங்கான் தொழில்நுட்பவியல் பட்டய பயிற்சி நடத்தி வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் ஒவ்வொரு வருடமும் 50 மாணவர்களை முதலாம் ஆண்டிலும், 10 மாணவர்கள் இரண்டாம் ஆண்டிலும், பிற்சேர்க்கை மூலமாக சேர்க்கப்படுகிறார்கள்.

**2.13.4 அரசினர் அறிவியல் கண்ணாடிப் பயிற்சி மையம், கோயம்புத்தூர்**

சென்னை கிண்டியில் இருந்து கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்ட இப்பயிற்சி நிறுவனம், இரண்டாண்டு கால அளவு

கொண்ட அறிவியல் கண்ணாடி உற்பத்தி செய்வதற்கு தேவையான செயல்முறை பயிற்சியினை வழங்கி வருகிறது.

**2.14 அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்**

அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம் கோயம்புத்தூரில் கடந்த 40 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இந்நிறுவனம் சுகாதாரத் துறை, தடய அறிவியல் துறை மற்றும் வேளாண்மை துறை ஆய்வகங்களுக்கு தேவையான அறிவியல் கண்ணாடி உபகரணங்களை தயாரித்து வருகிறது.

**2.15 மின் மற்றும் மின்னணு தொழில்களுக்கான அடிப்படை விவர வங்கி மற்றும் தகவல் மையம், சென்னை**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் மின் மற்றும் மின்னணு தொழில் முனைவோர்களுக்கு பயனளிக்கும் விதமாக உதவிட இத்தகவல் தொழில் முனைவோர்களுக்கு தேவையான தொழில் நிறுவனங்கள் பற்றிய விவரம், குறிப்பிட்ட தொழில்களுக்காக தொழில் திட்ட குறிப்பேடுகளை வழங்குதல் மற்றும் மாநில அளவில் வாங்குவோர் மற்றும் விற்பனையாளர் குறித்த தேவையான அடிப்படை தகவல்கள் அடங்கிய கையேடுகளை பராமரித்து வருகிறது. தொழில் நுட்ப நூலகம் ஒன்று 1517 புத்தகங்கள் மற்றும் 70 சஞ்சிகைகளைக் கொண்டுள்ளது.

**2.16 அரசு தொழிற்பேட்டைகள்**

**2.16.1 பீங்கான் தொழிற்பேட்டை, விருத்தாச்சலம்**

பீங்கான் தொழிலின் வளர்ச்சிக்கு ஊக்குவிக்கும் பொருட்டு தனித்துவமாக பீங்கான் தொழிற்பேட்டை விருத்தாசலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த

தொழிற்பேட்டையில் **64** தொழிற்கூடங்கள் குறைந்த அழுத்த இன்சுலேட்டர்கள், பீங்கான் பொம்மைகள், உயர் வெப்பம் தாங்கக் கூடிய செங்கற்கள் போன்ற பீங்கான் பொருட்களை உற்பத்தி செய்கின்றன.

### 2.16.2 மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள்

மின் மற்றும் மின்னணு தொழில் முனைவோர்களின் தேவைக்கிணங்க மாநில அரசால் **517** மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் **140** தொழிற்கூடங்களுடன் கூடிய எட்டு தொழிற்பேட்டைகள் உள்ளன. இத்தொழிற்பேட்டைகள் திருவான்மியூர் (சென்னை மாவட்டம்) பெருங்குடி (சென்னை மாவட்டம்), காக்களூர் (திருவள்ளூர் மாவட்டம்), கப்பலூர் (மதுரை மாவட்டம்), சூரமங்கலம் (சேலம் மாவட்டம்), காளப்பட்டி (கோயம்புத்தூர் மாவட்டம்), ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) மற்றும் துவாக்குடி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

## 2.17 தொழில் முனைவோர் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்

தமிழக அரசு சிறந்த சிறு தொழில் முனைவோர்களுக்கான விருதுகள் மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில் சிறப்பாக செயல்படும் வங்கிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் விருதுகள் கீழ்கண்ட இனங்களில் வழங்க அட்டவணை தயார் செய்யபட்டுள்ளது.

- ➢ சிறந்த தொழில் முனைவோருக்கான மாநில விருது ரூ.**50,000/–** மற்றும் நினைவுப்பரிசு ரூ.**10,000/–.**

- சிறந்த தொழில் முனைவோருக்கான வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கான மாநில விருது ரூ.50,000/– மற்றும் நினைவுப்பரிசு ரூ.10,000/–.
- சிறந்த தொழில் முனைவோருக்கான உற்பத்திப் பொருளின் தரம் மற்றும் ஏற்றுமதிக்கான மாநில விருது ரூ.50,000/– மற்றும் நினைவுப்பரிசு ரூ.10,000/–.
- சிறந்த மகளிர் தொழில் முனைவோருக்கான மாநில விருது ரூ.50,000/– மற்றும் நினைவுப்பரிசு ரூ.10,000/–.
- சிறந்த தொழில் முனைவோருக்கான மாவட்ட அளவிலான நினைவுப்பரிசு ரூ.10,000/– (ஒவ்வொரு மாவட்டத்திற்கும்).

**குறுந் தொழில்களுக்கு கடன் வழங்குவதில் முன்னோடி வங்கிகளுக்கான மாண்புமிகு முதலமைச்சர் விருது:**

| | |
|---|---|
| முதல் பரிசு (நினைவுப்பரிசு) | ரூ. 30,000/– |
| இரண்டாம் பரிசு (நினைவுப்பரிசு) | ரூ. 20,000/– |
| மூன்றாம் பரிசு (நினைவுப்பரிசு) | ரூ. 15,000/– |

## 2.18 தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

இத்துறையின் மூலம் கைவினைஞர்கள், தொழிலாளர்கள், தொழில்நுட்ப தொழிலாளர்கள் மற்றும் சிறு உற்பத்தியாளர்கள் ஆகியோர்களை உறுப்பினர்களாகக்

கொண்டு பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தை வாய்ப்பு தொடர்பான சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை முதன்மை நோக்கமாகக் கொண்டு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் இன்ட்கோசர்வ், சேகோசர்வ், டீசர்வ் போன்ற சங்கங்கள் மிக முக்கியமானவைகளாகும். இக்கூட்டுறவு சங்கங்களுக்கு போதுமான நிதி வசதி தொடர்புகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கென்று தனியாக ஒரு நிதி நிறுவனம் தாய்கோ வங்கி என அழைக்கப்படும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டது.

## 2.19 இன்ட்கோசர்வ்

'இன்ட்கோசர்வ்' என்று பிரபலமாக அழைக்கப்படும் தமிழ்நாடு சிறு தேயிலை விவசாயிகள் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இணையம் 1965–ல் குன்னூரில் நிறுவப்பட்டது. தலைமை நிறுவனம் தமது உறுப்பினர் தொழிற்சாலைகளின் அனைத்து செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். இச்சங்கம் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான சேமிப்பு கிடங்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உள்ளீடுகள் அளித்தல் மற்றும் உற்பத்தி செய்யப்படும் தேயிலைகளை சந்தைப்படுத்துதல் போன்ற பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் தற்பொழுது 15 தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் 24,780 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. வருடத்திற்கு 188.00 இலட்சம் கிலோ தேயிலைத்தூள் உற்பத்தி செய்யப்படுகிறது. இது மாநிலத்தின் மொத்த தேயிலைத்தூள் உற்பத்தியில் 17 விழுக்காடாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நீலகிரி மாவட்டம் நஞ்சநாடு பகுதியினைச் சார்ந்த சிறு தேயிலை விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, நஞ்சநாட்டில் புதிய தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை ஒன்று ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படும் என அறிவித்தார். இத்திட்டத்தற்காக, அரசானது ரூ.2 கோடியை தனது பங்காக வழங்கியுள்ளது. அதே போன்று இப்புதிய தொழிற்சாலைக்கு மானியத்துடன் கூடிய நிதியுதவியாக ரூ.2.50 கோடி நபார்டு வங்கியால் வழங்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டுதல் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் ஆகிய பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

➢ **விலை நிலைநிறுத்தல் நிதியம் ஏற்படுத்துதல்**

தேயிலை சந்தையில் ஏற்படும் பெரும் விலை ஏற்ற இறக்கம் காரணமாக தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் பெரும் அளவில் பாதிக்கப்படுவதால், அவைகளுக்கு மாதந்தோறும் மிகப் பெரிய நட்டம் ஏற்படுகின்ற சூழலுக்கு தள்ளப்பட்டு, அதன் காரணமாக தங்களின் உறுப்பினர்களான சிறு தேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு உரிய விலையினை வழங்க இயலாத சூழ்நிலை ஒவ்வொரு மாதமும் ஏற்படுகிறது. இதற்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, அரசானது ரூ.12 கோடி மதிப்பீட்டில் விலை நிலைநிறுத்தும் நிதியத்தினை அமைத்து, அதில் தனது பங்காக ரூ.8 கோடியை 2014–15ஆம் ஆண்டில் ஒரே தவணையில் தொடராச் செலவினமாகவும், மீதி ரூ.4 கோடியை இண்ட்கோசர்வ் தனது பங்காகவும் வழங்கியுள்ளது.

தேயிலை தொழில் பிரிவில் சிறு தேயிலை விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **பசுந்தேயிலை எடையிடுதலை மேம்படுத்துதல்**

பசுந்தேயிலை சேகரிப்பு மற்றும் நியாயமான, கணக்கிடுதல் முறையை ஒளிவுமறைவற்ற வகையில் மேற்கொள்ள (குறைந்த கால அளவு மற்றும் குறைந்த செலவில் மேற்கொள்ளவும்) அரசானது 2013–14 மற்றும் 2014–15 ஆம் ஆண்டுகளில் அனைத்துத் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும் 200 மின்னணு தராசுகள் கொள்முதல் செய்து நிறுவ ரூ.113 இலட்சம் மானியமாக வழங்கியது.

- **மின்சக்தி சிக்கன நடைமுறைகள்**

தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் மின் சிக்கன நடைமுறை திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, மின்திறன் சேமிப்பு கருவிகள் கொள்முதல் செய்து நிறுவ அரசு இரண்டு கட்டங்களாக ரூ.105 இலட்சத்தை விடுவித்துள்ளது.

## 2.20 டீசர்வ்

'டீசர்வ்' என்று பரவலாக அழைக்கப்படும் தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கமானது, நீலகிரி மாவட்டம் குன்னூரில் நிறுவப்பட்ட நாட்டின் முதல் மின்னணு தேயிலை ஏல மையமாகும். இச்சங்கம் 2002–ல் பதிவு செய்யப்பட்டு, 2003 முதல் செயல்படத் துவங்கியது. தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள், எஸ்டேட் தேயிலை தொழிற்சாலைகள்

மற்றும் டான்டீ ஆகியோர் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். தேயிலை ஏல முறையில் நியாயமான, வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை முக்கிய நோக்கமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் மூலம் உற்பத்தியாளர்களின் தேயிலைத் தூளுக்கு அதிக விலை கிடைக்க செய்வதுடன், அதன் மூலம் சிறு தேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கவும் வழிவகை செய்கிறது.

## 2.21 சேகோசர்வ்

''சேகோசர்வ்' என்று பொதுவாக அனைவராலும் அழைக்கப்படும் சேலம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் மரவள்ளி கிழங்கு உற்பத்தி செய்யும் மாவட்டங்களிலுள்ள சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தியாளர்களின் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கச் செய்வதற்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் **1981–**ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இச்சங்கம் துவங்கப்படுத்துவதற்கு முன்பு, சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தியாளர்கள் குறிப்பாக சிறு தொழில் நிறுவனங்கள், அமைப்பு சார்ந்த சந்தை வாய்ப்பு இல்லாததினால், வியாபார இடைத்தரகர்களின் சுரண்டல் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டனர். உற்பத்தியாளர்களின் இவ்வாறான துயரினை போக்கவும், அவர்களது உற்பத்தி பொருட்களுக்கு சந்தை வசதியை ஏற்படுத்தி கொடுப்பதற்காகவும் நிறுவப்பட்ட சேகோசர்வ் சங்கமானது, தனது உறுப்பினர்களுக்கு நிதி உதவி மற்றும் சேமிப்பு கிடங்கு வசதிகளையும் வழங்கி வருகிறது.

## 2.22 தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி)

**1960–**ம் ஆண்டுகளில், தொழிற் கூட்டுறவு சங்கங்கள் தங்களுடைய அன்றாட தேவைகளுக்கு நிதியுதவி பெறுவதில்

கூட பெரும் சிரமங்களை சந்தித்து வந்தன. இத்தகைய இடர்பாடுகளை நீக்கும் பொருட்டும், அச்சங்கங்களுக்கு நிதி வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் பொருட்டும், தாய்கோ வங்கி என்று பிரபலமாக அழைக்கப்படும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியானது **1961–**ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் இத்துறையின் கீழ் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வரும் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதை மட்டுமே குறிக்கோளாக கொண்டு இவ்வங்கி துவங்கப்பட்டது. ஆனால், நாளடைவில் இவ்வங்கியானது தமது சேவைகளை அனைத்து பிரிவினருக்கும் விரிவு செய்துள்ளது. தற்போது தாய்கோ வங்கியானது தனிநபர்களுக்கும் பல்வேறு கடன் வசதிகளை வழங்கி வருகிறது. மேலும் இவ்வங்கி, பொது மக்களிடமிருந்து வைப்புத் தொகைகளைப் பெற்றும், அவர்களுக்கென சேமிப்பு மற்றும் வியாபார கணக்கு வசதிகளை வழங்கியும் வருகிறது. இவ்வங்கியானது மாநிலத்தில் அரசுத் துறைகளின் கடன் வழங்கும் திட்டங்களை செயல்படுத்துவதிலும் பங்கேற்று வருகிறது. **417** சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கும் இவ்வங்கி, அரசின் பங்குத்தொகை ரூ.**268.30** இலட்சம் உட்பட மொத்தம் ரூ.**631.44** இலட்சத்தை பங்கு மூலதனமாகக் கொண்டு இயங்கி வருகிறது. சென்னையை தலைமையிடமாகக் கொண்ட இவ்வங்கி மொத்தம் **44** கிளைகளை கொண்டு மாநிலம் முழுவதும் இயங்குகிறது.

### 2.23 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

உறுப்பினர் கயிறு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் கயிறு பொருட்களை சந்தைப்படுத்தவும், அச்சங்கங்களுக்கு தேவையான மூலப் பொருட்களை கொள்முதல் செய்வதை எளிமையாக்கும் நோக்கத்துடனும் மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு கயிறு விற்பனை இணையம் என்று அழைக்கப்படும்

“டான்கோபெட்” என்ற கயிறு விற்பனை இணையம் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்பொழுது, இத்துறையின் கீழ் 66 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள், அரசின் பங்கு ரூ.252.47 இலட்சம் உட்பட ரூ.281.96 இலட்சத்தை மொத்த பங்கு மூலதனமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. கயிறு தொழிலானது 11,073க்கும் மேற்பட்ட தொழிலாளர் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. இதில் 80 விழுக்காடு மகளிராவர்.

சந்தை மேம்பாட்டு நிதி உதவி என்ற திட்டத்தினை கயிறு வாரியம் 2000–2001 ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டமானது கயிறு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் கயிறு பொருட்களை சந்தைப்படுத்துவதோடல்லாமல், அச்சங்கங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மற்றும் இதர சட்டப்பூர்வ பயன்களை பெறச் செய்து, அதன் மூலம் உற்பத்தியினை ஊக்குவித்து, பெருமளவில் வேலைவாய்ப்பினையும் நல்கி வருகிறது.

### 2.24 இதர தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

தொடர்ச்சியான வேலைவாய்ப்பினை வழங்கும் பொருட்டு, செங்கல் உற்பத்தி, பாலித்தீன் பை தயாரித்தல், ஆட்டோ சேவை, அச்சக உற்பத்தியாளர்கள் சேவை, ஒப்பந்தத் தொழிலாளர் சேவை, கைவினைத்தொழில், தையல் தொழில், பொறியியல் ஆகிய பிற பிரிவுகளிலும் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இத்துறையால் துவங்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் மூலம், நலிந்த பிரிவினைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாறான தொழிற் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குவதன் மூலம், திறன் மற்றும் பகுதி

திறன் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியான மற்றும் நிலையான வேலைவாய்ப்புகள் கிடைப்பதோடு அல்லாமல், சட்ட ரீதியான பலன்களை பெறவும் வழிவகை செய்யப்படுகிறது.

## 2.25 பாரம்பரிய தொழில்களை புத்துயிர் ஊட்டும் நிதியுதவி வழங்கும் திட்டம் (SFURTI)

கயிறு தொழில் உட்பட பாரம்பரிய மிக்க தொழில்களின் உற்பத்தி திறனையும், அதன் சந்தை வாய்ப்பினையும் அதிகரித்து இதர தொழில்களுடன் போட்டியிடும் செயல்பாட்டினை ஊக்குவித்து அதன் மூலம் அவ்வகையான தொழில்களை வளர்ச்சி அடையச் செய்யும் பொருட்டு, மத்திய அரசானது பாரம்பரிய தொழில்களை புத்துயிர் ஊட்டும் நிதியுதவி வழங்கும் திட்டத்தினை (ஸ்பூருட்டி) உருவாக்கியது. இத்திட்டத்தின் கீழ் உபகரணங்களை மாற்றியமைத்தல், பொது வசதி மையங்கள் அமைத்தல், திறன் வளர்த்தல், வடிவமைத்தல், சிப்பமிடுதல், சந்தை வாய்ப்பினை மேம்படுத்தல் மற்றும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற சேவைகளை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. XII-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் ஸ்பூருட்டி திட்டத்தின் கீழ் 9 கயிறு குழுமங்கள் கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், கன்னியாகுமரி, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர், புதுக்கோட்டை, மற்றும் திருநெல்வேலி ஆகிய ஒன்பது மாவட்டங்களில் அமைக்க மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இக்கயிறு குழுமங்களில் நார்கழிவு கட்டிகள் தயாரித்தல், கயிறு பிரஷ், ஊசிவலை மெத்தை தயாரித்தல், தோட்ட வேலை சாதனங்கள், கயிறு ஆபரணங்கள், கயிறு ஒட்டுப்பலகை, தானியங்கி இயந்திரம் மூலம் கயிறு திரித்தல் மற்றும் கயிறு ஜீயோ டெக்ஸ்டைல்ஸ் தயாரித்தல் போன்ற உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இக்குழுமங்களில் கண்டறியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அவ்வாய்வறிக்கைகள் மத்திய அரசின் வழிகாட்டுதல் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் ஆரம்ப மொத்தத் திட்ட மதிப்பீட்டு தொகையான ரூ.8.81 கோடிக்கு பதிலாக, ரூ.25.86 கோடிக்கு மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கயிறு குழுமத்தின் வழிகாட்டுதல் குழுவானது மார்ச் 2014–இல் நடைபெற்ற கூட்டத்தில் கண்டறியும் ஆய்வு அறிக்கைகளின் நிலைத்தன்மை மற்றும் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்துள்ளது. இதற்கிடையில், மத்திய அரசானது மறுசீரமைக்கப்பட்ட வழிமுறைகளை வெளியிட்டு அதனடிப்படையில் கயிறு வாரியம் இட்காட் நிறுவனத்தை தொழில்நுட்ப முகவராக நியமித்துள்ளது. இந்த இட்காட் நிறுவனம் தற்பொழுது விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கான தொடக்க பணிகளை மேற்கொண்டுள்ளது.

### 2.26 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மூலமாக வேலைவாய்ப்பு உருவாக்கம்

XI–ஆவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்துறையால் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் வேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை அட்டவணை-7ல் கொடுக்கப் பட்டுள்ளது.

**அட்டவணை – 7**

| ஆண்டு | வேலை வாய்ப்பு உருவாக்கம் |
|---|---|
| 2007–08 | 150599 |
| 2008–09 | 110346 |
| 2009–10 | 146029 |
| 2010–11 | 330145 |
| 2011–12 | 320165 |
| மொத்தம் | 1057284 |

XII ஆம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் சுமார் **15** இலட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில், XII ஆவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் **31.03.2015** வரையிலான காலத்தில் மாநிலத்தில் **10.34** இலட்சம் நபர்களுக்கு அட்டவணை–8ல் கொடுக்கப்பட்டுள்ளவாறு வேலைவாய்ப்பு உருவாக்க பட்டுள்ளது.

**அட்டவணை– 8**

| வருடம் | வேலை வாய்ப்பு உருவாக்கம் |
|---|---|
| 2012–13 | 3,38,435 |
| 2013–14 | 3,43,665 |
| 2014–15 | 3,52,152 |
| **மொத்தம்** | **10,34,252** |

**2.27 குறு, சிறு மற்றும் நடுத்தரக் கொள்கை 2008–ன்படி 2011–12 முதல் 2014–15 வரை வழங்கப்பட்ட மானிய திட்டங்களின் விவரம்**

**i. முதலீட்டு மானியம்**

2011-12 முதல் **2014–15** வரை, அட்டவணை–**9**ல் உள்ளவாறு **5930** பயனாளிகளுக்கு ரூ.**25000** இலட்சங்கள் மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு **2014–15**ல் மட்டும் **1460** பயனாளிகளுக்கு ரூ.**7000** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை - 9**

| வருடம் | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2011-12 | 5000.00 | 5000.00 | 1316 |
| 2012-13 | 6000.00 | 6000.00 | 1613 |
| 2013-14 | 7000.00 | 7000.00 | 1541 |
| 2014-15 | 7000.00 | 7000.00 | 1460 |
| **மொத்தம்** | **25000.00** | **25000.00** | **5930** |

**ii. குறைந்தழுத்த மின் மானியம்**

2011-12 முதல் **2014–15** வரை, அட்டவணை–**10**ல் உள்ளவாறு **4776** பயனாளிகளுக்கு ரூ.**2400** இலட்சங்கள் குறைந்தழுத்த மின் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு **2014–15**ல் மட்டும் **1106** பயனாளிகளுக்கு ரூ.**600** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### அட்டவணை – 10

| வருடம் | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2011-12 | 600.00 | 600.00 | 1371 |
| 2012-13 | 600.00 | 600.00 | 1130 |
| 2013-14 | 600.00 | 600.00 | 1169 |
| 2014-15 | 600.00 | 600.00 | 1106 |
| மொத்தம் | **2400.00** | **2400.00** | **4776** |

**iii. மின்னாக்கி மானியம்**

2011-12 முதல் **2014–15** வரை, அட்டவணை**–11-**ல் உள்ளவாறு **4210** பயனாளிகளுக்கு ரூ.**4748.09** இலட்சங்கள் மின்னாக்கி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு **2014–15**ல் மட்டும் **734** பயனாளிகளுக்கு ரூ.**800** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### அட்டவணை – 11

| வருடம் | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2011-12 | 800.00 | 800.00 | 852 |
| 2012-13 | 2348.09 | 2348.09 | 1936 |
| 2013-14 | 800.00 | 800.00 | 666 |
| 2014-15 | 800.00 | 800.00 | 734 |
| மொத்தம் | **4748.09** | **4748.09** | **4188** |

**iv.** **மதிப்பு கூட்டு வரிக்கு ஈடான மானியம்**

2011-12 முதல் **2014–15** வரை, அட்டவணை–**12**ல் உள்ளவாறு **1165** பயனாளிகளுக்கு ரூ.**1300** இலட்சங்கள் மதிப்பு கூட்டு வரிக்கு ஈடான மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு **2014–15**ல் மட்டும் **365** பயனாளிகளுக்கு ரூ.**350** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 12**

| வருடம் | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2011-12 | 250.00 | 250.00 | 285 |
| 2012-13 | 350.00 | 350.00 | 234 |
| 2013-14 | 350.00 | 350.00 | 281 |
| 2014-15 | 350.00 | 350.00 | 365 |
| **மொத்தம்** | **1300.00** | **1300.00** | **1165** |

**v.** **பின்முனை வட்டி மானியம்**

**அ. தொழில் நுட்ப மேம்பாடு நவீன மயமாக்கல்**

2011-12 முதல் **2014–15** வரை, அட்டவணை–**13**ல் உள்ளவாறு **346** பயனாளிகளுக்கு ரூ.**388.35** இலட்சங்கள் தொழில் நுட்ப மேம்பாடு, நவீன மயமாக்கல் – பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு **2014–15**ல் மட்டும் **60** பயனாளிகளுக்கு ரூ.**30** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை –13**

| வருடம் | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2011–12 | 303.87 | 303.87 | 172 |
| 2012–13 | 24.48 | 24.48 | 89 |
| 2013–14 | 30.00 | 30.00 | 25 |
| 2014–15 | 30.00 | 30.00 | 60 |
| மொத்தம் | **388.35** | **388.35** | **346** |

**ஆ. கடன் உத்தரவாத நிதிகுழும திட்டம்**

**2011–12** முதல் **2014–15** வரை, அட்டவணை–14ல் உள்ளவாறு **135** பயனாளிகளுக்கு ரூ.**44.62** இலட்சங்கள் – கடன் உத்தரவாத நிதிகுழும திட்ட–பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு **2014–15**ஆம் ஆண்டில் மட்டும் **53** பயனாளிகளுக்கு ரூ.**10** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை–14**

| வருடம் | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2011–12 | 14.74 | 14.74 | 33 |
| 2012–13 | 10.00 | 9.88 | 22 |
| 2013–14 | 10.00 | 10.00 | 27 |
| 2014–15 | 10.00 | 10.00 | 53 |
| **மொத்தம்** | **44.74** | **44.62** | **135** |

### இ. தேசிய விளிம்பு நிதி திட்டம்

2011-12 முதல் **2014–15** வரை, அட்டவணை–**15**ல் உள்ளவாறு **362** பயனாளிகளுக்கு ரூ.**10.725** இலட்சம் தேசிய விளிம்பு நிதி திட்ட – பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை - 15**

| வருடம் | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது (ரூபாய் இலட்சத்தில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011–12 | 8.85 | 8.85 | 284 |
| 2012–13 | 1.875 | 1.875 | 78 |
| 2013–14 | 0.00 | 0.00 | – |
| 2014–15 | 0.00 | 0.00 | – |
| மொத்தம் | **10.725** | **10.725** | **362** |

### 2.28. பல்வேறு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்களின் சாதனைகள் (2011-12 முதல் 2014-15 வரை)

**i. பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)**

2011-12 முதல் **2014–15** வரை, அட்டவணை–**16**ல் உள்ளவாறு 5168 பயனாளிகளுக்கு ரூ.10,362.03 இலட்சங்கள் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு **2014–15**ல் மட்டும் 1256 பயனாளிகளுக்கு ரூ.2827.71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 16**

| நிதியாண்டு | எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட விளிம்பு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2011–12 | 1560 | 2909.03 |
| 2012–13 | 1316 | 2258.40 |
| 2013–14 | 1036 | 2366.89 |
| 2014–15 | 1256 | 2827.71 |
| மொத்தம் | **5168** | **10,362.03** |

**ii. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)**

இத் திட்டத்தின் கீழ் 2011-12 முதல் **2014–15** வரை, அட்டவணை **17**-ல் உள்ளவாறு, 17758 பயனாளிகளுக்கு ரூ.6121.79 இலட்சம், வழங்கப் பட்டுள்ளது. நிதியாண்டு **2014–15**ல் மட்டும் 3465 பயனாளிகளுக்கு ரூ.1817.68 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 17**

| நிதியாண்டு | எண்ணிக்கை | வழங்கப்பட்ட மானியம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| **2011–12** | **4750** | **1314.17** |
| **2012–13** | **4892** | **1490.41** |
| **2013–14** | **4651** | **1499.53** |
| **2014–15** | **3465** | **1817.68** |
| மொத்தம் | 17758 | 6121.79 |

## 2.29. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்கள்

2011-12 முதல் **2014–15** வரை அட்டவணை **18**-ல் உள்ளவாறு, **92** வசதியாக்க குழு அமர்வுகளின் மூலமாக **260** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகையாக சுமார் ரூ.**1420.96** இலட்சம் பெற்று வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு **2014–15**ல் மட்டும் **27** வசதியாக்க குழு அமர்வுகளின் மூலமாக **45** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகையாக சுமார் ரூ.**233.93** இலட்சம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 18**

| வருடம் | குறு சிறு தொழில் நிறுவனங்கள் வசதியாக்க குழு அமர்வுகளின் எண்ணிக்கை | தீர்வு காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நிலுவைத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2011-2012 | 15 | 38 | 233.86 |
| 2012-2013 | 35 | 115 | 396.65 |
| 2013-2014 | 15 | 62 | 556.52 |
| 2014-2015 | 27 | 45 | 233.93 |
| மொத்தம் | 92 | 260 | 1420.96 |

**2.30 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்**

2012-13 முதல் **2014–15** வரை, அட்டவணை–**19**-ல் உள்ளவாறு, **846** பயனாளிகளுக்கு ரூ.**7716.70** இலட்சம் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 19**

| பொருள் | 2012-13* | | 2013-14 | | 2014-15 | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | மானியம் | எண் | மானியம் | எண் | மானியம் | எண் | மானியம் |
| பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் | 559 | 6531.39 | 1247 | 12380.70 | 1397 | 11720.17 | 3203 | 30632.26 |
| தற்காலிக கடன் ஒப்பளிப்பு | 305 | 3902.94 | 744 | 7847.27 | 826 | 7673.00 | 1906 | 19423.21 |
| தொழில் முனைவோர் பயிற்சி பெற்றோர் | 284 | - | 645 | - | 789 | - | 1718 | - |
| இறுதி கடன் ஒப்பளிப்பு பெறப்பட்டவை | 224 | 2504.57 | 482 | 4952.01 | 555 | 5157 | 1261 | 12613.58 |
| மானியம் | 218 | 2385.76 | 456 | 4335.52 | 172 | 995.42 | 846 | 7716.70 |

* இத்திட்டம் **2012–13** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 3. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

### 3.1 சிட்கோ நிறுவனத்தின் முக்கிய நோக்கம்

சிட்கோ நிறுவனம் தமிழக அரசால் 1970 ஆம் ஆண்டு தமிழகத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை வழிநடத்தவும், ஆலோசனை வழங்கவும், உதவிடவும், நிதியுதவி, பாதுகாப்பு மற்றும் அவற்றின் நலன்களை மேம்படுத்தவும், அவைகளுக்கு மூலதனம், கடன்வசதி, வழிமுறைகள், ஆதாரங்கள், தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகத்திறன் போன்றவைகளை பெறுவதற்கு உதவிடவும், அவற்றின் உற்பத்தி முறைகள், உற்பத்தி நுட்பங்கள், மேலாண்மை நுட்பங்கள் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்றவைகளை வளர்ப்பதற்கு உதவிடவும் நிறுவப்பட்டது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சி மற்றும் தரமான உட்கட்டமைப்பு வசதி ஆகியவற்றை அதிகப்படியாக வழங்குவதை மையப்படுத்தியே சிட்கோ நிறுவனத்தின் செயல்பாடுகள் அமைந்துள்ளன. இவை தவிர சிட்கோ நிறுவனம் விற்பனை உதவி மற்றும் மூலப் பொருட்கள் வழங்குதல் முதலிய சேவைகளையும் வழங்குகிறது.

இந்த நிறுவனத்தின் பங்கு மூலதனம் ரூபாய் 24.70 கோடியாகும். 2013–14ஆம் நிதியாண்டில், ரூபாய் 2.59 கோடி இலாபம் பெற்று ரூபாய் 2.47 கோடி ஈவுத்தொகையாகவும் செலுத்தியுள்ளது.

### 3.2 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான

தொழிற்பேட்டைகளை மேம்படுத்தியும் அவற்றை நிர்வகித்தும் வருகிறது. 31.03.2015 வரை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 101 தொழிற்பேட்டைகளையும், 6993 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளையும், மற்றும் 4510 தொழிற்கூடங்களையும் உருவாக்கியுள்ளது மேலும் 13 புதிய தொழிற்பேட்டைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொழிற்பேட்டைகளின் விவரங்கள் இணைப்பு—அ—வில் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.2.1 சிட்கோ நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ள அரசு தொழிற்பேட்டைகள்

மாநில அரசு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தியதில் முன்னோடியாகத் திகழ்கிறது. 1958—லிருந்து 1974 வரை 4230 ஏக்கர் நிலப்பரப்பில் 35 தொழிற்பேட்டைகள், தொழில் வணிக ஆணையரகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 1958ஆம் ஆண்டில் முதல் தொழிற்பேட்டை, 404.08 ஏக்கர் நிலப்பரப்பில் கிண்டியில் நிறுவப்பட்டது. 1963ஆம் ஆண்டு 1167 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெரிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கான தொழிற்பேட்டை அம்பத்தூரில் நிறுவப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 720, தொழில் துறை நாள் 17.05.1974ன்படி தொழில் வணிக ஆணையரகம் சிட்கோ நிறுவனத்திற்கு தங்களின் கட்டுப்பாட்டிலுள்ள 35 தொழிற்பேட்டைகளை மாறுதல் செய்து கொடுத்துள்ளது. 01.06.1974 முதல் சிட்கோ நிறுவனம் அரசின் முகவராக இத்தொழிற்பேட்டைகளை நிர்வகித்து வருகிறது. இத்தொழிற்பேட்டைகளின் விபரங்கள் அட்டவணை—20ல் உள்ளது.

# அட்டவணை–20

சிட்கோ நிறுவனம் நிர்வகித்து வரும் அரசு தொழிற்பேட்டைகளின் விவரங்கள்

| வ. எண் | மாவட்டம் | தொழிற்பேட்டையின் பெயர் | ஆரம்பிக்கப்பட்ட வருடம் | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | 1) கிண்டி | 1958 | 404.08 |
| 2 | திருவள்ளூர் | 2)அம்பத்துார் | 1963 | 1167.00 |
| | | 3)காக்கலூர் | 1988 | 283.01 |
| 3 | காஞ்சிபுரம் | 4)காஞ்சிபுரம் | 1968 | 37.95 |
| 4 | வேலூார் | 5)காட்பாடி | 1968 | 19.48 |
| | | 6)அரக்கோணம் | 1968 | 51.74 |
| 5 | திருவண்ணாமலை | 7)திருவண்ணாமலை | 1968 | 15.56 |
| 6 | கிருஷ்ணகிரி | 8)கிருஷ்ணகிரி | 1965 | 41.86 |
| 7 | தருமபுரி | 9) தருமபுரி | 1965 | 20.28 |
| 8 | சேலம் | 10)சேலம் | 1967 | 19.55 |
| | | 11)மேட்டூர் | 1967 | 184.38 |
| 9 | ஈரோடு | 12) ஈரோடு | 1959 | 25.13 |
| 10 | கோயம்புத்துார் | 13) குறிச்சி | 1972 | 88.43 |
| 11 | கடலூார் | 14) கடலூார் | 1971 | 15.60 |
| | | 15)வடலூார் | 1972 | 26.22 |
| 12 | தஞ்சாவூர் | 16) தஞ்சாவூர் | 1968 | 21.94 |
| | | 17)கும்பகோணம் | 1968 | 32.30 |
| 13 | நாகப்பட்டினம் | 18)நாகப்பட்டினம் | 1966 | 20.97 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | திருச்சிராப்பள்ளி | 19)துவாக்குடி | 1974 | 478.38 |
| | | 20) திருவெறும்பூர் | 1974 | 74.50 |
| | | 21) அரியமங்கலம் | 1974 | 17.64 |
| 15 | கரூர் | 22) கரூர் (வெள்ளாளப்பட்டி) | 1974 | 26.63 |
| 16 | புதுக்கோட்டை | 23) புதுக்கோட்டை | 1974 | 23.18 |
| 17 | தேனி | 24) தேனி | 1963 | 26.59 |
| 18 | திண்டுக்கல் | 25)திண்டுக்கல் | 1965 | 39.90 |
| | | 26)வத்தலகுண்டு | 1965 | 16.26 |
| 19 | மதுரை | 27)கே.புதூர் | 1960 | 56.05 |
| | | 28) கப்பலூர் | 1966 | 534.64 |
| 20 | சிவகங்கை | 29)சிவகங்கை | 1966 | 70.61 |
| | | 30)காரைக்குடி | 1966 | 180.19 |
| 21 | விருதுநகர் | 31)விருதுநகர் | 1958 | 45.65 |
| 22 | திருநெல்வேலி | 32) பேட்டை | 1959 | 50.55 |
| 23 | தூத்துக்குடி | 33) கோவில்பட்டி | 1962 | 85.54 |
| 24 | கன்னியாகுமரி | 34) கோணம் | 1964 | 20.70 |
| | | 35) மார்த்தாண்டம் | 1964 | 7.50 |
| | | **மொத்தம்** | | **4229.99** |

### 3.2.2 தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழிற்பேட்டைகள்

தொழிற்பேட்டைகளை ஏற்படுத்துவது, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஒரு முக்கியமான

செயல்பாடாகும். தொழிற்பேட்டைக்களுக்கான அரசு நிலங்கள், அரசிடமிருந்து நில உரிமை மாற்றம் மூலமாகவும் மற்றும் தனியார் நிலங்கள் நில உரிமையாளரிடமிருந்தும் பெறப்படுகிறது.

### 3.2.2.1 2010ஆம் ஆண்டு வரை சிட்கோ நிறுவனத்தால் நிறுவப்பட்ட தொழிற்பேட்டைகள்

சிட்கோ நிறுவனம் 2010ஆம் ஆண்டு வரை 2332.67 ஏக்கர் நிலப்பரப்பில் 54 தொழிற்பேட்டைகளை நிறுவியுள்ளது. இத்தொழிற்பேட்டைகளில் 5207 குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைக்கப்பட்டு, 90,000 நபர்கள், வேலை வாய்ப்பு பெற்றுள்ளார்கள்.

### 3.2.2.2 மகளிர் தொழிற் பூங்காக்கள்

2010ஆம் ஆண்டு வரை, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட 54 தொழிற்பேட்டைகளில், 5 தொழிற்பேட்டைகள் மகளிருக்கான தொழிற்பூங்காக்களாகும், இத்தொழிற்பூங்காக்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், 2001ஆம் ஆண்டு மகளிர் முன்னேற்றத்திற்காக அறிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக தொழில்மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மகளிர்க்கான தொழிற்பூங்கா விவரங்கள் அட்டவணை–21ல் உள்ளது.

**அட்டவணை–21**

| வ. எண் | மகளிர்தொழிற்பூங்காவின் பெயர் | தொடங்கப்பட்ட ஆண்டு | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | திருமுல்லைவாயில், திருவள்ளூர் மாவட்டம் | 2001 | 246.07 |
| 2 | திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் | 2002 | 11.48 |
| 3 | வாழவந்தான்கோட்டை , திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 2003 | 51.70 |
| 4 | கருப்பூர், சேலம் மாவட்டம் | 2004 | 51.24 |
| 5 | கப்பலூர், மதுரை மாவட்டம் | 2008 | 18.87 |
| | மொத்தம் | | 379.36 |

### 3.2.2.3 2011-15 வரை நிறுவப்பட்ட தொழிற்பேட்டைகள்

2011–2015 ஆண்டு காலத்தில் அறிவிக்கப்பட்ட 25 புதிய தொழிற்பேட்டைகளில் கீழ்வரும் 12 தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன. இதன் விபரங்கள் அட்டவணை–22ல் உள்ளது.

## அட்டவணை–22

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | துவங்கப்பட்ட வருடம் | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | இராசாத்தவலசு, திருப்பூர் மாவட்டம் | 2011 | 51.80 |
| 2 | மாத்தூர், புதுக்கோட்டை மாவட்டம் | 2013 | 19.92 |
| 3 | வாணியம்பாடி, வேலூர் மாவட்டம் | 2013 | 7.08 |
| 4 | விருதுநகர் (நகர்ப்புறம்), விருதுநகர் மாவட்டம் | 2013 | 37.54 |
| 5 | வெண்மணியாத்தூர், விழுப்புரம் மாவட்டம் | 2011 | 38.88 |
| 6 | பட்டணம், விழுப்புரம் மாவட்டம் | 2014 | 60.57 |
| 7 | காட்டுவன்னஞ்சூர், விழுப்புரம் மாவட்டம் | 2014 | 42.00 |
| 8 | மல்லூர், அரியலூர் மாவட்டம் | 2014 | 25.34 |
| 9 | பர்வதனஹள்ளி, தருமபுரி மாவட்டம் | 2014 | 29.89 |
| 10 | மின்னூர், வேலூர் மாவட்டம் | 2014 | 10.00 |
| 11 | வேட்டம்பாடி, நாமக்கல் மாவட்டம் | 2014 | 15.34 |
| 12 | பாளையப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் | 2012 | 104.37 |

| | | |
|---|---|---|
| மொத்தம் | | **442.73** |

மீதமுள்ள 13 தொழிற்பேட்டைகளுக்கு தகுதியான நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு அவை பல்வேறு மேல் நடவடிக்கை நிலைகளில் உள்ளன.

### 3.2.3 தனியார் தொழிற்பேட்டைகள்

14.11.2011 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **"நாமக்கல் நகரின் வெளியே தனியார் கனரக வாகன கட்டுமான தொழிற்பேட்டை ஒன்று கூட்டுறவு முயற்சியில் அமைக்கப்படும்"** என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள். மேற்படி அறிவிப்பின்படி நாமக்கல் நகரத்திலிருந்து 17 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேலகவுண்டன்பட்டி கிராமத்தில் 52.23 ஏக்கர் நிலப்பரப்பில், ரூபாய் 1367.75 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், கனரக வாகன கட்டுமான தொழிற்பேட்டை அமைக்கப்பட்டு உள்ளது.

10.10.2013 ஆம் நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசாணை (நிலை) எண்.53ல் ரூபாய் 1267.75 இலட்சங்கள், அரசின் மானியமாக ஒப்புதல் வழங்கப்பட்டு நாமக்கல்லின் புறநகர் பகுதியில் உள்ள அந்த கட்டுமான பணிகள் மொத்த திட்டச் செலவாக ரூ.1367.75 இலட்சங்களில் இணைக்கூட்டு ஒப்பந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள ரூ.1 கோடி பயனாளிகள் மற்றும் சிறப்பு நோக்கு ஊர்தியின் பங்களிப்பாக இருக்கும்.

முதல் தவணையாக ரூ.633.87 இலட்சங்கள் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த தனியார் தொழிற்பேட்டை அமைக்கப்பட்டதன் பயனாக 305 கனரக வாகன கட்டுமான நிறுவனங்கள் நகரத்திலிருந்து இடம் பெயர்வதால் நாமக்கல் நகரின் போக்குவரத்து நெரிசல் குறையும்.

### 3.2.4 நகர் / மாநகரில் இயங்கிவரும் தொழிற்பேட்டைகளை நகருக்கு வெளியே மாற்றி அமைத்தல்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2013–14ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் விதி 110–ன் கீழ் சிறப்புச் சலுகைகள் அறிவிக்கப்பட்டன. அந்த அறிவிப்பின்படி மாநில அரசு அரசாணை வழங்கி, நகர்/மாநகருக்குள் இயங்கி வரும் தொழிற்பேட்டைகளை நகருக்கு வெளியே மாற்றி அமைக்க தொழில் முனைவோர்கள் முன் வரும் பட்சத்தில் மின்சாரம் பெறுவதற்காகவும், தண்ணீர் இணைப்புகள் பெறுவதற்காகவும், உட்கட்டமைப்பு வசதிகளான கூட்டரங்குகள், பொது வசதி மையங்கள் முதலானவை ஏற்படுத்துவதற்காகவும் வளர்ச்சி நிதியாக அரசு 75 விழுக்காடு மானியமாக அதிகபட்சமாக ரூ.15 கோடி மற்றும் 50 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.10 கோடி வழங்கும். மேலும் தொழில் முனைவோர் சங்கங்கள் ஒரு குழுமம் அமைத்து சிறப்பு நோக்க ஊர்தி மூலம், நகர் மற்றும் மாநகரத்தின் வெளியே புதிய தொழிற்பேட்டை அமைக்க முன் வரும் பட்சத்தில் வளர்ச்சி நிதியாக 50 விழுக்காடு மானியம் அதிகபட்சம் ரூ.10 கோடி வழங்கும்.

இது வரை 4 பிரேரணைகள், சிறப்பு நோக்க ஊர்திகளிடருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 3.2.5 கூட்டுக்குழும முயற்சி திட்டத்தின் கீழ் தொழிற்பேட்டைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சட்டப்பேரவையின் **110** விதியின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி மாநில அரசு அரசாணை வழங்கியது, சிட்கோ நிறுவனத்தின் பங்கு **10** விழுக்காடு வரை தனியார் தொழிற்பேட்டை சங்கங்களுடன், பங்காக கொண்டு புதிய தொழிற்பேட்டைகளை கூட்டு முயற்சியில் உருவாக்கப்படும் என அறிவித்தார். இது தொடர்பாக தொழில் முனைவோர் சங்கத்திலிருந்து விண்ணப்பங்கள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 3.2.6 மத்திய அரசின் குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்

சிட்கோ நிறுவனம் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மத்திய அரசின் குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேம்படுத்துகிறது.

2011–15 ஆண்டு வரை கீழ்காணும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன் விபரங்கள் அட்டவணை–23ல் உள்ளது.

## அட்டவணை–23

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | பயனாளி களின் பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | கோவில்பட்டி தூத்துக்குடி மாவட்டம் | 202.00 | 121.20 | 60.60 | 20.20 |
| 2 | ஆத்தூர் கரூர் மாவட்டம் | 397.38 | 238.43 | 119.21 | 39.74 |
| 3 | காக்களூர் திருவள்ளூர் மாவட்டம் | 423.33 | 254.00 | 127.00 | 42.33 |
| 4 | மேட்டூர், சேலம் மாவட்டம் | 293.76 | 176.26 | 88.13 | 25.38 |
| 5 | கணபதிபாளையம் திருப்பூர் மாவட்டம் | 45.82 | 27.49 | 13.75 | 4.58 |
| 6 | ஆலத்தூர் காஞ்சிபுரம் மாவட்டம் | 444.96 | 266.98 | 133.49 | 44.50 |
| 7 | மலுமிச்சம்பட்டி கோயம்புத்தூர் மாவட்டம் | 200.00 | 113.25 | 56.62 | 30.13 |
| 8 | திருவெறும்பூர் திருச்சி மாவட்டம் | 432.00 | 259.20 | 129.60 | 43.20 |
| மொத்தம் | | 2439.25 | 1456.81 | 728.40 | 250.06 |

மேற்கூறிய 8 திட்டங்களில், 6 திட்டங்களான தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி, கரூர் மாவட்டத்தில் ஆத்தூர், திருவள்ளூர் மாவட்டத்தில் காக்களூர், சேலம் மாவட்டத்தில் மேட்டூர் திருப்பூர் மாவட்டத்தில் கணபதிபாளையம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆலத்தூர் ஆகியவை முடிக்கப்பட்டுவிட்டன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மலுமிச்சம்பட்டியில் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. திருச்சி மாவட்டத்தில் திருவெறும்பூர் தொழிற்பேட்டையைப் பொறுத்தவரை மத்திய அரசு இத்திட்டத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. முழுஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.3 ஒதுக்கீட்டுக் கொள்கை

தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் குறித்து செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்பட்டு, ஒதுக்கீடுகளில் வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்படுகிறது. தகுதியான விண்ணப்பதாரர்கள், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் வணிகத் துறை ஆணையரகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கத்தின் (டான்ஸ்டியா) பிரதிநிதி ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழுவால் நேர்காணல் செய்யப்பட்டு, தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். குலுக்கல் முறையில் தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

சிட்கோ நிறுவனம், தொழிற்பேட்டைகளில் உள்ள தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப 5 சென்ட் முதல் 100 சென்ட் (1.00 ஏக்கர்) மற்றும் அதற்கு மேலான அளவுள்ள தொழில்மனைகளை **''முழு கிரைய விலை விற்பனை''** மூலம் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளில் ஒதுக்கீடு செய்கிறது. 2014–15 ஆம் ஆண்டில் 79 தொழில்மனைகள் மற்றும் 1 தொழிற்கூடம் புதிய தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

### 3.3.1 சிட்கோவின் புதிய ஒதுக்கீட்டுக் கொள்கை

சிட்கோ நிறுவனம் தொழிற்பேட்டைகளில், முழு கிரைய விலை விற்பனை மூலம் தொழில் மனைகளை ஒதுக்கீடு செய்து வருகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க புதிய ஒதுக்கீட்டு கொள்கை 18.11.2013–ஆம் நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத்

தொழில் நிறுவனங்கள் (சி) துறை அரசாணை (நிலை) எண் 66–ல் வெளியிட்டுள்ளது. 2013–14 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்படும் புதிய தொழிற்பேட்டைகளில் இம்முறை நடைமுறைபடுத்தப்படுகிறது. இக்கொள்கையின்படி 30 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் மனைகள் / தொழிற் கூடங்கள் ஒதுக்கீடு செய்யவும், 30 ஆண்டு கால முடிவில் தொழில் முனைவோருக்கு முழு கிரய விலையில் வாங்கவும் விருப்புரிமை அளிக்கப்படும்.

### 3.3.2 பல்வேறு பிரிவினருக்கு தொழில் மனைகள் / தொழிற் கூடங்கள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளித்தல்

31.01.2009 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (சி) துறையின் அரசாணை (நிலை) எண் 7–ன்படி புதிதாக உருவாக்கப்படும் தொழிற்பேட்டையில் விற்பனைக்கு உள்ள மொத்த நிலப் பகுதியில் 30 விழுக்காடு குறுந்தொழில்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

கீழ்கண்ட பிரிவினருக்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

- மகளிர் தொழில் முனைவோர் – 30%
- முன்னாள் இராணுவத்தினர் – 10%
- பட்டியல் இனத்தினர் / பழங்குடியினர் மற்றும் திருநங்கையர் – 10%

மேற்படி இனங்களில் போதுமான விண்ணப்பங்கள் பெறப்படாத பட்சத்தில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த

தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் மற்ற பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**29.10.2012** நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் **49** ன்படி, புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் (NEEDS), தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி (EDP) பெற்ற முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் விண்ணப்பித்தால், சிட்கோ தொழில் மனைகள்/தொழிற்கூடங்கள் காலியாக இருக்கும் பட்சத்தில் சிறப்பு பரிசீலனை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும் .

### 3.4 குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தின் [MSE-CDP] கீழ் பொது வசதி மையம் அமைத்தல்

குறு, சிறுதொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டமானது தொழில் நிறுவனங்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக பிராந்திய பரப்பில் தொகுப்பாக அமைந்துள்ள குழுமங்களை உருவாக்கி குறு, சிறு தொழில் நிறுவனங்களின் ஆதாரங்களை பெருக்குவதற்கும் நிதி வசதிகளைப் பெருக்குவதற்கும் மற்றும் சந்தை வாய்ப்பை பெருக்குவதற்கும் உதவி செய்கிறது.

ஒரு குழுமம் என்பது குறிப்பிட்ட பிராந்தியத்தில் அமைந்த ஒரே மாதிரியான மற்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய தொழில் நிறுவனங்களின் தொகுப்பாகும். அவை பொதுவான சந்தை, தொழில் நுட்பங்கள், தொழிலாளர் திறன் தேவைகளை பகிர்ந்து கொள்வதாகவும் ஒரே மாதிரியான பொருட்களை தயாரிப்பதாகவும் அமையும்.

குழுமங்களின் முக்கிய கூறுகள் பின் வருமாறு:

- தயாரிப்பு முறை, தரக்கட்டுப்பாடு, பரிசோதனை, சக்தியை பயன்படுத்துதல், மாசுக் கட்டுப்பாடு ஆகியவை ஒரே மாதிரியாக இருத்தல்.

- ஒரே மாதிரியான தொழில் நுட்பம் மற்றும் விற்பனை திட்டங்கள் மற்றும் அணுகுமுறைகள்

- குழும உறுப்பினர்களுடன் எளிமையான தொடர்பு முறைகள்

- பொதுவான சவால்கள் மற்றும் வாய்ப்புகள்

குறு, சிறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கிடையே போட்டித்திறனை அதிகரிக்கவும் மற்றும் உற்பத்தியை பெருக்குவதற்கான முக்கிய உத்தியாக குழும வளர்ச்சியை மத்திய மற்றும் மாநில அரசுகள் மேற்கொண்டுள்ளது. தொழிலகங்களை குழுமங்களாக ஆக்குவதன் மூலம் பலதரப்பட்ட சேவைகளான வங்கி மற்றும் நிதி உதவி நிறுவனங்களின் சேவைகளை குறைந்த செலவில் பெறுவதன் மூலம் இச்சேவைகள் இக்குழுமங்களுக்கு சிக்கனமான வழியில் கிடைத்திடவும் அவை அதிக அளவில் கிடைத்திடவும் வழிவகை செய்யப்படுகிறது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், பொதுவான பிரச்சனைகளை அணுகி, குறு மற்றும் சிறு தொழில்களின் வளர்ச்சி மற்றும் நிலைப்பாடு ஆகியவற்றை ஆதரித்தல், சுயஉதவிக் குழு, கூட்டமைப்பு முதலியவற்றை ஏற்படுத்தி பொதுவான ஆதரவு அளித்தல் மற்றும் பொது வசதி மையம் ஏற்படுத்துதல் (பரிசோதனை மையம், பயிற்சி மையம், மூலப் பொருட்கள் கிடங்கு, கழிவு நீர் சுத்திகரிப்பு, உற்பத்தி

முறையை பூர்த்தி செய்தல்) ஆகியவற்றை குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் அடைய முடியும்.

குறு, சிறு தொழில் நிறுவனங்களின் குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பொது வசதி மையம் அமைப்பது தொடர்பான நிதி ஆதாரம் கீழ் உள்ள அட்டவணை–24ல் கொடுக்கப்பட்டுளளது.

**அட்டவணை – 24**

| | |
|---|---|
| மத்திய அரசு மானியம் | 70 விழுக்காடு(அதிக பட்ச திட்டத் தொகை ரூ.15 கோடி) |
| மாநில அரசு மானியம் | 10விழுக்காடு (அதிக பட்ச மானியம் ரூ.1 கோடி) |
| சிறப்பு நோக்க ஊர்தி / பங்களிப்பு வங்கிக் கடன் | 20 விழுக்காடு |

மொத்தமாக 29 திட்டங்களுக்கு ரூ.157.36 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசின் மானியமாக ரூ. 106.37 கோடி அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு ரூ.12.99 கோடி மானியம் அளித்துள்ளது. மேற் கூறிய 29 திட்டங்களில் 7 திட்டங்கள் ஏற்கனவே முடிவடைந்துவிட்டன. மீதமுள்ள திட்டங்களை நிறைவேற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்குழுமங்களின் மூலமாக சுமார் 25000 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவர்.

மேலும் மதுரை மாவட்டம் கப்பலூர் மற்றும் கோவை மாவட்டம் குறிச்சி ஆகிய இடங்களில் முதலுதவி மையம் மற்றும் மருந்தகம் அமைக்க தமிழக அரசு ரூ.25 இலட்சம் 2014–15 ஆம் ஆண்டில் நிதி அனுமதித்துள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.

குந்தா தொழில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையின் பொன் விழா கொண்டாட்டத்தின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ரூ. 15 கோடி திட்ட மதிப்பீட்டில் நீலகிரி மாவட்ட தேயிலை தொழிலை ஊக்குவிக்க கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத்தில், ஒரு பொது வசதி மையத்துடன் கூடிய தேயிலைக் குழுமம் (Tea Cluster) உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். தேயிலைத்தூள் கலத்தல், தேயிலைத்தூளை பைகளில் நிரப்பும் வசதி (Packing), சேமிப்புக் கிடங்கு, பரிசோதனை மையம் மற்றும் விற்பனை மையம் ஆகியவற்றை கொண்டதாக இந்த பொது வசதி மையம் இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 04.01.2014 அன்று இத்திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்கள். டிட்கோ நிறுவனம் மூலமாக அசைடு (ASIDE) திட்டத்தின் கீழ் சேமிப்பு கிடங்கிற்கான நிதியுதவி ரூ.6.50 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சேமிப்புக்கிடங்கு பணிகள் முடிக்கப்பட்டவுடன் பொது வசதி மையம் அமைப்பதற்கு குறு, சிறு தொழில் நிறுவனங்கள் குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநிலத்தில் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் (பொது வசதி மையம்) செயல்பாட்டின் விபரம் கீழ் கண்ட அட்டவணை–12ல் வரையறுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை–25

| | | |
|---|---|---|
| அ. | மத்திய அரசிடமிருந்து இறுதி ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள் (இணைப்பு –ஆ) | 29 |
| ஆ. | மத்திய அரசினால் கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் | 3 |
| இ. | மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட பல்வேறு நிலையில் உள்ள திட்டங்கள் | 20 |

### 3.4.1 குறுந்தொழில் குழுமம்

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 13.02.2014 அன்று நிதி நிலை அறிக்கையின்போது தமிழக அரசு குறுந்தொழில் குழுமங்களை ஊக்குவிக்கும் பொருட்டு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது என்றும், அதன்படி தமிழக அரசின் புதிய திட்டமாகிய பொது உற்பத்தி மையம் ஒன்றை தொடங்குவதற்கு ஆவன செய்வதுடன் மூலப்பொருள் வங்கி மற்றும் விற்பனை வசதி ஆகியவற்றையும் கணக்கில் கொண்டு திட்டம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார். முதற்கட்டமாக 2014–15ம் ஆண்டில் 10 குழுமங்களை மேம்படுத்த ரூ.25 கோடியை அரசு வழங்கும். இந்த திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

இது தொடர்பாக அரசாணை (நிலை) எண் 26, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை (சி) துறை, நாள் 18.05.2015 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### 3.4.2 தமிழ்நாடு அரசின் பகுதி –II திட்டம்

இத்திட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு அரசிடமிருந்து **2011–15** காலத்தில் ரூ. **107.50** இலட்சம் மானியமாக பெற்று நடவடிக்கையில் உள்ள ஒரு பணியை தவிர இதர பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## 3.5 மூலப்பொருட்கள் விநியோகம்

மூலப்பொருட்களாகிய இரும்பு மற்றும் எஃகு, மெழுகு, பொட்டாசியம் குளோரேட் மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் ஆகியவற்றை அம்பத்தூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சாத்தூர் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் உள்ள மூலப்பொருள் கிடங்குகளின் வழியாகவும் ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய கிளை அலுவலகங்களின் வழியாகவும் சிட்கோ நிறுவனம் விநியோகம் செய்து வருகின்றது.

**2014–15** ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, எட்டிய சாதனை பின்வரும் அட்டவணை–**26**ல் காண்பிக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை – 26

| வ. எண் | மூலப் பொருள் | இலக்கு 2014–15 | | சாதனை (பிப்ரவரி –2015 வரை) | |
|---|---|---|---|---|---|
| | | அளவு (மெ. டன்னில்) | மதிப்பு ரூ. (இலட்சத்தில்) | அளவு (மெ. டன்னில்) | மதிப்பு ரூ. (இலட்சத்தில்) |
| 1 | இரும்பு மற்றும் எஃகு | 4400.000 | 1981.00 | 68.92 | 30.74 |
| 2 | பாரபின் மெழுகு | 5170.000 | 5017.00 | 3116.23 | 3013.09 |
| 3 | காகிதம் (நேரடி விற்பனை) | 240.000 | 150.00 | 179.843 | 127.86 |
| 4 | காகிதம் (முகவாண்மை விற்பனை) | 1210.000 | 726.00 | 460.046 | 307.35 |
| 5 | பொட்டாசியம் குளோரேட் | 5.500 | 5.28 | 4.000 | 4.06 |
| | மொத்தம் | **11025.500** | **7879.28** | **3829.034** | **3483.09** |

### 3.6 விற்பனை உதவித் திட்டம்

சிட்கோ நிறுவனம் **2014–15** ஆம் ஆண்டில் ரூ. **330.24** இலட்சங்கள் மதிப்பிலான வழங்கல் ஆணைகளைப் பெற்று நிறைவேற்றி இருக்கிறது.

விற்பனை உதவித் திட்டத்தின் கீழ், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு சிட்கோ உதவி செய்கிறது. இத்திட்டத்தின்கீழ் சிட்கோவிடம் பதிவு செய்த குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் சார்பாக சிட்கோ மாநில அரசுத் துறைகள் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத்துறை/

நிறுவனங்களை அணுகி வழங்கல் ஆணைகளை பெற்று உதவுகிறது. சிட்கோ நிறுவனத்தால் பெறப்பட்ட வழங்கல் ஆணைகள், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் இடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. தரமான பொருட்கள் சரியான நேரத்தில் வழங்கப்படுவதை சிட்கோ நிறுவனம் உறுதி செய்கிறது. வழங்கப்பட்ட பொருட்களுக்கு அரசுத் துறைகள் / உள்ளாட்சி அமைப்புகள் பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் தொகையில் 3% ஆலோசனைக் கட்டணமாக பிடித்தம் செய்த பின்னர் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பொருட்களுக்கு உண்டான தொகை வழங்கப்படுகிறது.

## 3.7 மின் ஆளுமை

சிட்கோ நிறுவனத்தின் செயல்பாடுகளை மறு சீரமைக்கும் குறிக்கோளுடன் அலுவலக நடைமுறைகளை எளிமையாக்கி இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை விரைவுபடுத்தும் பொருட்டும் இந்நிறுவனம் அதனுடைய அனைத்துப் பணிகளையும் கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் வேலைத்திறனை அதிகரிக்கவும் திறம்பட செயலாற்றவும் இயலும். முதற்கட்டமாக தொழில் மனைகள் ஒதுக்கீட்டிற்கான விண்ணப்பப் படிவங்களை சிட்கோ நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் (download) செய்துகொள்ளும் வசதியை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது.

மாநிலத்தில் சிட்கோவால் பராமரிக்கப்படும் அனைத்து தொழிற்பேட்டைகள் குறித்த முக்கிய விவரங்களான வரைபடம் தொழில் கூடம்/மனை, ஒதுக்கீட்டு விவரங்கள் தொழிலகங்களின் தொழில் நடவடிக்கைகள், உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு, உற்பத்திப் பொருட்கள்/சேவைகள் சந்தை வசதி மற்றும் மூலப்பொருட்கள் அடங்கிய GIS தகவல் தொகுப்பு ஒன்றை உருவாக்கும் பணி எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள நபர்கள் இலவசமாக அணுகிப் பெற சிட்கோவின் அதிகார பூர்வ இணைதளத்தில் இவ்விவரங்கள் பதிவேற்றம் செய்யப்படும்.

தொழிற்பேட்டையின் வரைபடத்தின் தொழில் மனைகள்/ தொழிற்கூடங்கள் பற்றிய விவரங்கள் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

## இணைப்பு – அ

## சிட்கோ நிறுவனத்தால் தற்போது பராமரிக்கப்படும் 101 தொழிற்பேட்டைகள்

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | அமைவிடம் | அரசு / சிட்கோ | துவங்கப் பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 1 | கிண்டி | அரசு | 1958 | 404.08 |
| | | 2 | அரும்பாக்கம் | சிட்கோ | 1979 | 3.92 |
| | | 3 | வில்லிவாக்கம் | சிட்கோ | 1979 | 2.04 |
| | | 4 | கொடுங்கையூர் | சிட்கோ | 1979 | 7.88 |
| 2 | திருவள்ளூர் | 5 | அம்பத்தூர் | அரசு | 1963 | 1167.00 |
| | | 6 | காக்களூர் | அரசு | 1988 | 283.01 |
| | | 7 | திருமழிசை | சிட்கோ | 1988 | 160.85 |
| | | 8 | கும்மிடிபூண்டி | சிட்கோ | 1988 | 25.24 |
| | | 9 | ஆர்.கே.பேட்டை | சிட்கோ | 1996 | 8.15 |
| | | 10 | விச்சூர் | சிட்கோ | 1994 | 59.16 |
| | | 11 | திருமுல்லைவாயல் (ம.தொ.பூ.) | சிட்கோ | 2001 | 246.07 |
| 3 | காஞ்சிபுரம் | 12 | காஞ்சிபுரம் | அரசு | 1968 | 37.95 |
| | | 13 | மறைமலைநகர் | சிட்கோ | 1981 | 39.50 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 14 | ஆலத்தூர் | சிட்கோ | 1984 | 150.00 |
| | | 15 | திருமுடிவாக்கம் (முதன்மை) | சிட்கோ | 1993 | 201.11 |
| | | 16 | திருமுடிவாக்கம் (குறு) | சிட்கோ | 2013 | 5.262 |
| | | 17 | திருமுடிவாக்கம் (ம.தொ.பூ.) | சிட்கோ | 2002 | 11.48 |
| 4 | வேலூர் | 18 | காட்பாடி | அரசு | 1968 | 19.48 |
| | | 19 | அரக்கோணம் | அரசு | 1968 | 51.74 |
| | | 20 | ராணிப்பேட்டை | சிட்கோ | 1972 | 113.44 |
| | | 21 | முகுந்தராயபுரம் | சிட்கோ | 1980 | 86.19 |
| | | 22 | வன்னிவேடு | சிட்கோ | 1987 | 16.44 |
| | | 23 | விண்ணமங்கலம் | சிட்கோ | 2009 | 10.49 |
| | | 24 | வாணியம்பாடி | சிட்கோ | 2013 | 7.08 |
| 5 | திருவண்ணாமலை | 25 | திருவண்ணாமலை | அரசு | 1968 | 15.56 |
| 6 | கிருஷ்ணகிரி | 26 | கிருஷ்ணகிரி | அரசு | 1965 | 41.86 |
| | | 27 | ஊத்தங்கரை | சிட்கோ | 1995 | 41.28 |
| | | 28 | ஓசூர் (சிப்காட்) | சிட்கோ | 1976 | 95.15 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 29 | ஓசூர் (புதியது) | சிட்கோ | 1999 | 18.80 |
| | | 30 | பர்கூர் | சிட்கோ | 1995 | 31.64 |
| | | 31 | போலுப்பள்ளி | சிட்கோ | 2009 | 60.96 |
| 7 | தருமபுரி | 32 | தருமபுரி | அரசு | 1965 | 20.28 |
| | | 33 | கடகத்தூர் | சிட்கோ | 2009 | 7.02 |
| | | 34 | பர்வதனஹள்ளி | சிட்கோ | 2014 | 29.89 |
| 8 | சேலம் | 35 | சேலம் | அரசு | 1967 | 19.55 |
| | | 36 | மேட்டூர் | அரசு | 1967 | 184.38 |
| | | 37 | கருப்பூர் (ம.தொ.பூ.) | சிட்கோ | 2004 | 51.24 |
| | | 38 | வீரபாண்டி | சிட்கோ | 1993 | 9.79 |
| 9 | நாமக்கல் | 39 | நாமக்கல் | சிட்கோ | 1977 | 10.09 |
| | | 40 | திருச்செங்கோடு | சிட்கோ | 1980 | 9.18 |
| | | 41 | வேட்டம்பாடி | சிட்கோ | 2014 | 15.34 |
| 10 | ஈரோடு | 42 | ஈரோடு | அரசு | 1959 | 25.13 |
| | | 43 | நஞ்சை ஊத்துக்குளி | சிட்கோ | 1995 | 13.05 |
| 11 | கோயம்புத்தூர் | 44 | குறிச்சி | அரசு | 1972 | 88.43 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 45 | மலுமிச்சம்பட்டி | சிட்கோ | 1994 | 36.14 |
| 12 | திருப்பூர் | 46 | கணபதிபாளையம் | சிட்கோ | 1993 | 17.10 |
| | | 47 | திருப்பூர் | சிட்கோ | 1978 | 10.14 |
| | | 48 | குடிமங்கலம் | சிட்கோ | 1992 | 6.74 |
| | | 49 | ராசாத்த வலசு | சிட்கோ | 2011 | 51.80 |
| 13 | நீலகிரி | 50 | ஊட்டி | சிட்கோ | 1981 | 10.65 |
| 14 | கடலூர் | 51 | கடலூர் | அரசு | 1971 | 15.60 |
| | | 52 | வடலூர் | அரசு | 1972 | 26.22 |
| 15 | விழுப்புரம் | 53 | பட்டணம் | சிட்கோ | 2014 | 60.55 |
| | | 54 | ஆசனூர் | சிட்கோ | 2009 | 107.80 |
| | | 55 | காட்டுவன்னஞ்சூர் | சிட்கோ | 2014 | 42.00 |
| | | 56 | வெண்மணி யாத்தூர் | சிட்கோ | 2011 | 38.88 |
| 16 | பெரம்பலூர் | 57 | எலம்பலூர் | சிட்கோ | 2009 | 44.48 |
| 17 | தஞ்சாவூர் | 58 | தஞ்சாவூர் | அரசு | 1968 | 21.94 |
| | | 59 | கும்பகோணம் | அரசு | 1968 | 32.30 |
| | | 60 | பிள்ளையார்பட்டி | சிட்கோ | 1974 | 10.96 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 61 | நாஞ்சிக்கோட்டை | சிட்கோ | 1996 | 26.30 |
| | | 62 | பாளையபட்டி | சிட்கோ | 2012 | 104.37 |
| 18 | நாகப்பட்டினம் | 63 | நாகப்பட்டினம் | அரசு | 1966 | 20.97 |
| | | 64 | மயிலாடுதுறை | சிட்கோ | 2009 | 12.56 |
| 19 | திருச்சிராப்பள்ளி | 65 | துவாக்குடி | அரசு | 1974 | 478.38 |
| | | 66 | திருவெறும்பூர் | அரசு | 1974 | 74.50 |
| | | 67 | அரியமங்கலம் | அரசு | 1974 | 17.64 |
| | | 68 | கும்பக்குடி | சிட்கோ | 2009 | 24.46 |
| | | 69 | வாழவந்தான்கோட்டை (ம.தொ.பூ.) | சிட்கோ | 2003 | 51.70 |
| | | 70 | வாழவந்தான் கோட்டை | சிட்கோ | 2008 | 179.02 |
| 20 | கரூர் | 71 | கரூர் (வெள்ளாளப்பட்டி) | அரசு | 1974 | 26.63 |
| | | 72 | கரூர் (ஆத்தூர்) | சிட்கோ | 1993 | 36.29 |
| 21 | புதுக்கோட்டை | 73 | புதுக்கோட்டை | அரசு | 1974 | 23.18 |
| | | 74 | புதுக்கோட்டை (சிப்காட்) | சிட்கோ | 1988 | 51.45 |
| | | 75 | மாத்தூர் | சிட்கோ | 1975 | 26.00 |
| | | 76 | மாத்தூர் (புதியது) | சிட்கோ | 2013 | 19.92 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22 | தேனி | 77 | தேனி | அரசு | 1963 | 26.59 |
| | | 78 | ஆண்டிபட்டி | சிட்கோ | 1994 | 22.34 |
| 23 | திண்டுக்கல் | 79 | திண்டுக்கல் | அரசு | 1965 | 39.90 |
| | | 80 | வத்தலகுண்டு | அரசு | 1965 | 16.26 |
| 24 | மதுரை | 81 | கே.புதூர் | அரசு | 1960 | 56.05 |
| | | 82 | கப்பலூர் | அரசு | 1966 | 534.64 |
| | | 83 | கப்பலூர் (ம.தொ.பூ) | சிட்கோ | 2008 | 18.87 |
| 25 | இராமநாதபுரம் | 84 | பரமக்குடி | சிட்கோ | 1976 | 10.00 |
| | | 85 | உரப்புளி | சிட்கோ | 1993 | 12.14 |
| | | 86 | கீழநகாச்சி | சிட்கோ | 1993 | 10.00 |
| 26 | சிவகங்கை | 87 | சிவகங்கை | அரசு | 1996 | 70.61 |
| | | 88 | காரைக்குடி | அரசு | 1966 | 180.19 |
| | | 89 | கிருங்காக்கோட்டை | சிட்கோ | 1993 | 21.85 |
| 27 | விருதுநகர் | 90 | விருதுநகர் | அரசு | 1958 | 45.65 |
| | | 91 | ராசபாளையம் | சிட்கோ | 1995 | 41.13 |
| | | 92 | விருதுநகர் (நகர் புறம்) | சிட்கோ | 2013 | 37.54 |
| 28 | திருநெல்வேலி | 93 | பேட்டை | அரசு | 1959 | 50.55 |
| | | 94 | கடையநல்லூர் | சிட்கோ | 1992 | 10.00 |
| | | 95 | வள்ளியூர் | சிட்கோ | 2005 | 39.91 |
| 29 | தூத்துக்குடி | 96 | தூத்துக்குடி பகுதி 1 | சிட்கோ | 1988 | 9.72 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 97 | தூத்துக்குடி பகுதி 2 | சிட்கோ | 2003 | 14.46 |
| | | 98 | கோவில்பட்டி | அரசு | 1962 | 85.54 |
| 30 | கன்னியாகுமரி | 99 | கோணம் | அரசு | 1964 | 20.70 |
| | | 100 | மார்த்தாண்டம் | அரசு | 1964 | 7.50 |
| 31 | அரியலூர் | 101 | மல்லூர் | சிட்கோ | 2014 | 25.34 |
| | | | **மொத்தம்** | | | **7020.36** |

## அட்டவணை – ஆ

## குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் ( பொது வசதி மையம்) மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள் (29)

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எ ண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (CFC) | மத்திய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஜவ்வரிசி குழுமம், சேலம். | 92.06 | 73.31 | 0.00 | 18.75 | 0.00 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 2 | தீப்பெட்டிக் குழுமம், குடியாத்தம் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 3 | தீப்பெட்டிக் குழுமம், விருதுநகர் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 4 | தீப்பெட்டிக் குழுமம், ஸ்ரீவில்லிப் புத்தூர். | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 5 | தீப்பெட்டிக் குழுமம், சாத்தூர் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 6 | தீப்பெட்டிக் குழுமம், கழுகுமலை | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 7 | தீப்பெட்டிக் குழுமம், கோவில் பட்டி | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 8 | மாவு அரவை இயந்திரம் தயாரிக்கும் குழுமம், கோயம் புத்தூர். | 288.20 | 99.00 | 16.52 | 172.68 | 0.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 9 | செங்கல் சூளை குழுமம், திருநெல்வேலி. | 227.27 | 122.73 | 22.72 | 29.55 | 52.27 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | பீங்கான் குழுமம், விருதாச்சலம். | 73.10 | 43.86 | மாநில அரசு 2 தொழிற் கூடங்களும் ரூ. 9.57 இலட்சமும் வழங்கி உள்ளது. | 18.45 | 10.79 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 11 | கயிறு குழுமம், சிவகங்கை. | 658.90 | 500.01 | 65.89 | 93.00 | 0.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 12 | பொறியியல் குழுமம், இராணிப் பேட்டை | 927.08 | 616.39 | 97.21 | 109.35 | 104.13 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 13 | அச்சுக் குழுமம், சிவகாசி. | 1314.17 | 767.81 | 90.66 | 180.28 | 276.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் ப ட்டு வருகிறது. |
| 14 | அரிசி ஆலைக் குழுமம், கீழப்பாவூர். | 690.58 | 466.03 | 69.05 | 145.50 | 10.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 15 | தானியங்கி உதிரி பாகங்கள் குழுமம், ஒசூர். | 690.94 | 439.89 | 70.75 | 105.30 | 75.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 16 | அச்சு குழுமம், கிருஷ்ணகிரி | 1172.52 | 964.14 | 100.00 | 108.38 | 0.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 17 | அரிசி ஆலைக் குழுமம், ஆலங்குளம் | 787.00 | 550.25 | 78.91 | 83.75 | 74.09 | மத்திய அரசின் முழு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மானியம் ஒரு பகுதி பெறப்பட்டுள்ளது. |
| 18 | அரிசி ஆலைக் குழுமம், தஞ்சாவூர் | 212.06 | 100.23 | 40.43 | 21.40 | 50.00 | திட்டம் நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது. |
| 19 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேஷன்ஸ், சேலம் | 1632.74 | 1277.71 | 100.00 | 253.03 | 0.00 | திட்ட ஆயத்த பணிகள் நடை பெற்று வருகிறது. |
| 20 | சென்னை பிளாஸ்டிக் குழுமம், காஞ்சிபுரம் | 1485.12 | 1026.9 6 | 100.00 | 258.16 | 100.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது |
| 21 | ரீப்ராக்டரி குழுமம் விருதாச் சலம் | 896.46 | 571.44 | 89.85 | 135.17 | 100.00 | திட்ட ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 22 | பொறியியல் குழுமம், பரமக்குடி | 498.89 | 373.80 | 23.34 | 53.75 | 48.00 | திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது |
| 23 | கேட் & கிரில் குழுமம், திருமுல்லைவாயில் | 284.87 | 197.93 | 29.69 | 57.25 | 0.00 | திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது |
| 24 | ஆயத்த ஆடை குழுமம் (பெண்கள்), தளவாய்புரம் | 104.24 | 74.28 | 9.36 | 20.60 | 0.00 | திட்ட ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது |
| 25 | தங்க நகை குழுமம், மதுரை | 356.46 | 255.80 | 29.14 | 39.92 | 31.60 | மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. முன்ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 26 | தானியங்கி மற்றும் விசைத்தறி குழுமம், சேலம். | 1333.96 | 886.45 | 98.78 | 162.18 | 186.80 | மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. முன் ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 27 | தீப்பெட்டிக் குழுமம், ஒ.மேட்டுப் பட்டி | 346.89 | 204.64 | 36.00 | 42.50 | 63.75 | திட்ட பணிகள் நடைபெறும் நிலையில் உள்ளன. |
| 28 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் குழுமம், கும்பகோணம் | 126.30 | 98.83 | 7.90 | 19.57 | 0.00 | திட்ட பணிகள் நடைபெறும் நிலையில் உள்ளது. |
| 29 | கயிறு குழுமம், ஈரோடு | 600.00 | 411.93 | 48.65 | 79.42 | 60.00 | மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. திட்ட பணிகள் முன் ஆயத்த செயல்பாட்டில் உள்ளது. |

## 4. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

### 4.1 உருவாக்கம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) 1965ஆம் வருடம் தொழில் மற்றும் வணிகத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த 64 சிறுதொழில் கூடங்களை ஏற்றுக்கொண்டு 1.12.1965 முதல் உற்பத்தியை தொடங்கியது.

சந்தையின் தேவைக்கேற்ப டான்சி தன்னுடைய நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தி அலகுகளை மறு சீரமைத்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் தற்போது டான்சிக்கு 29 தொழிற்கூடங்கள் உள்ளன. (12 மர அறைகலன் தொழிற் கூடங்கள், 14 கட்டுமானம் மற்றும் பொறியியல் தொழிற் கூடங்கள் மற்றும் 3 சிறப்புவகை தொழிற்கூடங்கள்)

### 4.2 முக்கிய நடவடிக்கைகள்

மரம் மற்றும் எஃகினாலான அறைகலன்கள், பிற கட்டுமான வேலைகள், மற்றும் கைப்பம்புகள் உற்பத்தி செய்தல், சாராவியைப் பயன்படுத்திக் தயாரிக்கப்படும் சர்ஜிகல் ஸ்பிரிட் போன்ற பொருட்களையும், வர்ணம், குழந்தைகள் எடை போடும் கருவி, கட்டுமானத்தில் அறைகள் பிரித்தல் போன்ற உள்வேலைப்பாடுகள் மற்றும் மின்வாரியத்திற்கு மின்கடத்தி பொருட்கள் தயாரித்தல் முதலியவற்றை டான்சி உற்பத்தி செய்து வருகிறது. ஆழ்குழாய் கைப்பம்புகள், தரமிக்க மரம் மற்றும் எஃகினாலான அறைகலன்கள், சாராவியைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் சர்ஜிகல் ஸ்பிரிட் , வர்ணம் போன்ற பொருட்களை உற்பத்தி செய்வதில் டான்சி தனி

முத்திரையை பதித்து தனித்தன்மை பெற்றுள்ளது. மேலும் டான்சி, ‘சர்வசிக்சா அபியான்’ திட்டத்தின்கீழ் பள்ளிகளுக்குத் தேவையான பலவகைப்பட்ட அறைகலன்களையும், அரசு மாணவ/மாணவியர் விடுதிகளுக்கான ஸ்டீல் கட்டில்கள் மற்றும் குடிநீர் வழங்க தேவையான கைப்பம்புகளையும், கைப்பம்புகளுக்குத் தேவையான உதிரி பாகங்களையும் வழங்கி வருகிறது.

நவீன தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக திறன் ஆகியவற்றை பயன்படுத்தி டான்சி சிறந்த உற்பத்தி திறனை நோக்கி முன்னேறி வருகிறது. கீழ்க்காணும் டான்சி தொழிற்சாலைகள் ஐ.எஸ்.ஓ–9001:2008 தரச்சான்றிதழை பெற்றுள்ளன:

- டான்சி கைப்பம்பு தொழிற்சாலை, அம்பத்தூர்
- டான்சி கருவி மற்றும் பொறியியல் தொழிற்சாலை, திருச்சி
- டான்சி எஃகு அறைகலன் தொழிற்சாலை, பழனி
- டான்சி எஃகு அறைகலன் தொழிற்சாலை, வேலூர்
- டான்சி எஃகு அறைகலன் தொழிற்சாலை, இராஜபாளையம்
- தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம், அம்பத்தூர்

## 4.3 செயல்பாடுகள்

டான்சியின் 2014–15ஆம் ஆண்டிற்கான செயல்பாடு (மார்ச், 2015 வரை) மற்றும் 2015–16 ஆம் ஆண்டிற்கான செயல்பாடு (ஜூலை, 2015 வரை) விபரம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| | 2014–15 | | 2015–16 | |
|---|---|---|---|---|
| | இலக்கு | செயல்பாடு (மார்ச்,2015 வரை) | இலக்கு | செயல்பாடு (ஜூலை, 2015 வரை) |
| உற்பத்தி | 66.00 | 57.59 | 77.00 | 19.59 |
| விற்பனை | 66.00 | 57.53 | 77.00 | 23.97 |
| வரிக்கு முன் இலாபம் | 17.07 | 15.05 | 19.23 | 2.26 |
| வருமான வரி ஒதுக்கீடு | 5.80 | 4.76 | 6.54 | 0.77 |
| நிகர இலாபம் (தோராயமாக) | 11.27 | 10.29 | 12.69 | 1.49 |

## 4.4 டான்சியின் தொழிற்கூடங்களின் வகைகள் மற்றும் உற்பத்தி பொருட்கள் விபரங்கள்

| தொழிற்கூட வகைகள் | உற்பத்தி பொருட்கள் |
|---|---|
| (அ) கட்டுமானம் மற்றும் பொறியியல் | தொழிற்சாலை கட்டிடங்கள், பாலங்கள், பேருந்து நிலையங்கள் போன்றவற்றிற்கு தேவைப்படும் பலவகை மென் கட்டுமானங்கள், கதவு மற்றும் ஜன்னல்கள், தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு தேவையான மின் கடத்தி பொருட்கள், நிலைப்பெட்டிகள், கிரில்கள், உலோகத் தகடுகளாலான பொருட்கள். |

| | |
|---|---|
| (ஆ) அறைகலன்கள் | மர அறைகலன்கள், தடுப்பு மற்றும் உள்ளறை வேலைப்பாடுகள், அறைகலன்கள். வீடு, அலுவலகம், கல்லூரி விடுதி மற்றும் மருத்துவ மனைகளுக்குத் தேவையான எஃகு அறைகலன்கள். |
| (இ) சிறப்பு வகைத் தயாரிப்புகள் | ஆழ்துளை குழாய் கைப்பம்புகள், பெரும் ஆழத்திற்கான ஆழ்துளை குழாய் கைப் பம்புகள், பம்புகளின் உதிரி பாகங்கள், ஸ்பிரிட்டை மூலப் பொருளாகக் கொண்ட மருத்துவ பொருட்களான சர்ஜிகல் ஸ்பிரிட், டி–நேச்சர்ட் ஸ்பிரிட், டிஞ்சர் செட்ரிமைடு, பொவிடோன் அயோடின், ஸ்பிரிட்டை அடிப் படையாகக் கொண்ட தொழில் பொருட்களான காஸ்கெட் ஷெல்லாக், பிரென்ச் பாலிஷ், தின்னர் மற்றும் கிருமி நாசிகளான லைசால், பெனாயில் |

மேற்கூறிய பொருட்களை தவிர கீழ்க்கண்ட பொருட்களும் டான்சி நிறுவனத்தால் உற்பத்தி செய்து வழங்கப்பட்டுள்ளன:

- பேரூராட்சிகளுக்குத் தேவையான தள்ளு வண்டிகளை ரூ.4.50 கோடிக்கு உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு தேவையான மின்கடத்தி பொருட்களை ரூ.9.79 கோடிக்கு உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.

- பள்ளி கல்வித் துறைக்குத் தேவையான கல்வி கற்கும் உபகரணங்களை ரூ.7.50 கோடிக்கு உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.

## 4.5 தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம் (டாபப்) (டான்சியின் துணை நிறுவனம்)

இந்நிறுவனம் டான்சியின் முழு ஆளுமைப் பெற்ற துணை நிறுவனமாக வர்ணங்கள் மற்றும் அது சம்பந்தமான பொருட்களை தயாரித்து வழங்க துவக்கப்பட்டது. டாபப் 18.11.1985 முதல் அம்பத்தூரில் அதன் பதிவுபெற்ற தலைமையிடத்தைக் கொண்டு உற்பத்தியை ஆரம்பித்தது. இதன் முக்கிய பணியானது பல்வேறு அரசு துறைகள், போக்குவரத்து கழகங்கள் மற்றும் தமிழக அரசு சார்பு துறைகளுக்குத் தேவைப்படும் சிவப்பு ஆக்ஸைடு வர்ணம், சாலைகளில் போக்குவரத்து குறியிடும் இரப்பர் கலந்த வர்ணம் மற்றும் இதர வர்ணங்களை உற்பத்தி செய்து வழங்கி வருவதாகும். டாபப் 2014–15 ஆம் ஆண்டில் (மார்ச், 2015 வரை) ரூ.1.67 கோடி மற்றும் 2015–16 ஆம் ஆண்டில் (ஜூலை, 2015 வரை) ரூ. 0.83 கோடி விற்பனை செய்துள்ளது.

## 5. தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்

மாநிலத்தில் தொழில் முனைவோரின் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றுவதன் வாயிலாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு நவம்பர் 2001 ல் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் இலாப நோக்கமில்லாத சங்கமாக நிறுவப்பட்டது. தொடங்கப்பட்ட நாள் முதல் 31.03.2015 வரையிலான காலத்தில் ஏறத்தாழ ஒரு லட்சம் நபர்களுக்கு பல்வேறு பயிற்சி திட்டங்களை நடத்தியுள்ளது.

### 5.1 நோக்கம்

- தொழில்முனைவு பயிற்சிகள் மூலமாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை முன்னேற்றுதல்,
- சொந்தமாக தொழில் நிறுவனங்களை துவக்குதலை இலட்சியமாகக் கொண்ட தொழில் முனைவோர்களுக்கு உதவுதல்,
- தொழில் முனைவோர் மேம்பாட்டிற்காகவும் பெரிய அளவில் தொழில் முனைவு கலாச்சாரத்தை ஏற்படுத்தவும் பலதரப்பட்ட வியூகங்களை வகுத்தல்,
- அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயிற்சி திட்டங்களை நடத்துதல்,
- திறன் மேம்பாட்டு பயிற்சி வாயிலாக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.

வேலைவாய்ப்பை உருவாக்குதலுக்கும் மற்றும் பரவலாக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கும் தொழில்

முனைவோர் மேம்பாடு என்பது முக்கியமான அம்சமாகும். புதுமையான பயிற்சி வழிமுறைகளைப் புகுத்தி, தகுதிவாய்ந்த பயிற்றுநர்களின் ஆதரவு மற்றும் ஆலோசனையுடன் தரமாக கற்பித்தல் வாயிலாக உபகரணங்களைக் கொண்டு பாடம் கற்பித்து தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் தனது குறிக்கோளை அடைய முனைகிறது.

## 5.2 பயிற்சி திட்டங்கள்

**5.2.1** மகளிர் மற்றும் படித்த இளைஞர்களிடையே காணப்படும் வேலை வாய்ப்பின்மைக்கு தீர்வுகாணவும், வேலைவாய்ப்பினை உருவாக்கவும் தமிழக அரசு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு **2013–14** ஆம் ஆண்டில் ரூ. **5** கோடி அளித்துள்ளது. இதில் ரூ. **4** கோடி தொழில் முனைவு பயிற்சிகள் மற்றும் திறன் வளர்த்தல் பயிற்சிகளை அளிக்கவும், ரூ. **1** கோடி தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகச் செலவுகளுக்குமென வழங்கப்பட்டது. பல்வேறு திட்டங்கள் வாயிலாக **3757** நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 5.2.2 தொழில் முனைவு மேம்பாட்டு பயிற்சித் திட்டம் (EDP)

தொழில் முனைவு மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் என்பது ஒரு பொருளாதார நடவடிக்கை அல்லது தொழில் நிறுவனத்தை வெற்றிகரமாக தொடங்கத் தேவையான திட்டமிடுதல், துவக்கம் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவைகளில் பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்டது. இத்திட்டத்தின் கீழ் **2013–14** ஆம் ஆண்டில் **736** நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 5.2.3 தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியில் பயிற்றுனர்களுக்கான பயிற்சித் திட்டம்

மாணவர்களிடம் தொழில் முனைவு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் சுய தொழில் துவங்கிட விரும்பும் வகையில் பயிற்சி அளிக்க ஏதுவாக கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களிடையே தொழில்முனைவு குறித்த அறிவு மற்றும் திறன்களை ஏற்படுத்துதல் இப்பயிற்சியின் நோக்கமாகும். 2014 – 15 ஆம் ஆண்டில் 50 பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த 100 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி சென்னை, கோவை, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் மாவட்டங்களில் நடைபெற்றது.

### 5.2.4 தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்

பயிற்சியாளர்களுக்கு திறன் மேம்பாட்டினை வழங்கி அதன்மூலம் நவீன தொழில் நுட்பத்திறன்களை ஏற்படுத்தி, மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களை தெரிவு செய்ய பயிற்சி அளித்தல் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2013–14ல் இயந்திரக் கூடப் பயிற்சி, இருசக்கர வாகன பழுது நீக்கம், உலோகங்களை ஒட்டுதல் (welding), நாகரீக ஆடைகள், உணவு மற்றும் பழங்கள் பதப்படுத்துதல், வலைதள வடிவமைத்தல், மென்பொருள் பராமரிப்பு மற்றும் வலைப்பின்னலமைப்பு, தோல் பொருட்கள், வீட்டு உபயோக மின்சாதனப் பொருட்களை பழுது நீக்கம் செய்தல் ஆகியவற்றில் 475 நபர்கள் பயன் பெற்றுள்ளனர். மேலும் 2014–15 ஆம் ஆண்டில் 400 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

## 5.2.5 தொழில் நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

இப்பயிற்சித் திட்டத்தின் கீழ், தோல், மின்னணு பொருட்கள் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள், சூரிய ஒளி சக்தி, தானியங்கி வாகனங்கள் தொழில்நுட்பம், ஆகிய குறிப்பிட்ட துறைகளில் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ், 2013–14ஆம் ஆண்டில் ல் 206 நபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

## 5.2.6 வேளாண்மைத் தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் நோக்கம் தொழில் நுட்பங்கள் மற்றும் மேலாண்மை காரணிகள் வழியாக வேளாண்மைப் பிரிவை விரிவாக்கம் செய்வதற்கு ஏதுவாக பயிற்சி அளித்து வேளாண் தொழில் முனைவோர்களை உருவாக்குதல் ஆகும். 2013–14ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் (2 தொகுதிகள்), திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சிதம்பரத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மூலமாக 117 வேளாண் பட்டதாரிகளுக்கு இப்பயற்சி வழங்கப்பட்டது.

## 5.2.7 குழுமங்கள் குறித்த விழிப்புணர்வுத் திட்டங்கள்

இத்திட்டம், அலுமினியம், அரிசி ஆலை, தானியங்கி வாகன உதிரிபாகங்கள், மோட்டார் பம்ப், துணிநூல், தீப்பெட்டி, முந்திரி மற்றும் கயிறு குழுமங்கள் சார்ந்த தொழில்களில் அமையும் தொழில் நிறுவன குழும செயல்பாடுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்பயிற்சித் திட்டங்கள், மேற்படி குழுமங்கள் தங்கள் திறனை வளர்த்துக்

கொண்டு உலகளாவிய போட்டியில் தங்களை நிலை நிறுத்திக்கொள்ளும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. 2013-14ல் குழும விழிப்புணர்வு திட்டங்களில் 360 தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 5.2.8 கல்லூரிகளில் தொழில் முனைவோர் பிரிவுகளை ஏற்படுத்துதல்

தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், மாநிலத்தில் உள்ள 50 உயர்கல்வி நிலையங்களில் தலா ரூ.1 இலட்சம் செலவில் தொழில்முனைவோர் மேம்பாட்டு பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவுகள் மாணவர்களிடையே சுய தொழில் முனையும் பண்பினை ஏற்படுத்தும்.

### 5.2.9 மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

மகளிருக்கு சுய தொழில் துவங்கிட திட்டமிடவும் செயல்படுத்திடவும் பயிற்சியளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். 2013–14ல் 375 மகளிருக்கு பயிற்சி அளித்ததுடன் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய நிதி ஆதரவு மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டன.

### 5.2.10 மகளிர் தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டம்

இப்பயிற்சி ஒரு புதிய தொழில் முனைவோருக்குத் தேவைப்படும் அடிப்படை தொழில் முனைவோர் திறன்களில் பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாது தேர்ந்தெடுக்கப்பட்ட மரபு சார்ந்த மற்றும் மரபு சாரா தொழில் நடவடிக்கைகளுக்குத்

தேவைப்படும் திறமைகளை அளிக்கிறது. **2014–15** இல் **350** மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 5.2.11 “வழிகாட்டிகள்” உருவாக்கும் பயிற்சி

வழிகாட்டிகள் உருவாக்கும் பயிற்சித் திட்டத்தில், தொழில் முனைவோர்களுக்கு பொருளாதாரத்தில் நிலவும் சந்தைப்போக்குகள் (Market trends) நிதி நிறுவனங்களை அணுகும் விதம், அரசின் சட்டம் மற்றும் விதிமுறைகளை புரிந்துகொள்ளல் குறித்த பயிற்சிகள் அடங்கும். வழிகாட்டிகள் உருவாக்கும் பிரிவுகள் (Mentorship Cell) அமைக்க தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் கோவை, ஈரோடு, மதுரை, சென்னை, ஓசூர், சேலம், அம்பத்தூர், கிண்டி, திருச்சிராப்பள்ளி மற்றும் திருப்பூர் ஆகிய பத்து தொழில் சார்ந்த சங்கங்களுக்கு தலா ரூ. 1 இலட்சம் என்ற விகிதத்தில் ரூ. 10 இலட்சம் வழங்கியுள்ளது. மேற்படி அனைத்து இடங்களிலும் வழிகாட்டி உருவாக்கும் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 5.3 தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தில் மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுப்பிரிவு

தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தால் மகளிருக்காக நடத்தப்படும் தொழில்முனைவோர் பயிற்சித் திட்டங்களை கண்காணிப்பதற்காக ஒரு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு மகளிர் தொழில் முனைவோர் தங்களது தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்திட மற்றும் சுய தொழில் துவங்கிட உரிய பயிற்சிக்கு வழிகாட்டுகிறது. மேலும் மகளிரின் மேலாண்மைத்திறன் அதிகரிக்க பயிற்சி அளிப்பதுடன்

கூடுதலாக அவர்களிடையே தொழில் முனைவுத் தன்மையை ஏற்படுத்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

ஸ்ரீரங்கம், சிதம்பரம் மற்றும் மதுரை ஆகிய மூன்று இடங்களில் உள்ள கல்லூரிகளில் மகளிருக்கென தொழில் முனைவோர் கருத்தரங்குகளை மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுப்பிரிவு நடத்தியுள்ளது.

**5.4 சூரிய ஒளி மின்சக்தி சாதனங்கள் பராமரிப்பு மற்றும் பயன்பாடு**

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து 4000 சுய உதவி குழுக்களை சேர்ந்த கிராமப்புற மகளிருக்கு சூரிய சக்தி உபகரணங்களை பயன்படுத்துதல் மற்றும் பராமரித்தல் குறித்து பயிற்சி அளிக்க ஒரு பெரிய அளவிலான திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இந்தப் பயிற்சித்திட்டங்கள் மாநிலத்தின் அனைத்து வட்டாரங்களிலும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

**5.5 வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்**

2014-15–ல் இத்திட்டத்தின் கீழ் 4975 வருங்கால தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**5.6 பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்**

2014-15 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1829 தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**5.7 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்கள் மேம்பாட்டுத்திட்டம் (NEEDS)**

**2014–15** ஆம் ஆண்டில் முதல் தலைமுறையினருக்கான 'புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ் மாநிலம் முழுவதுமுள்ள **811** நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**5.8 தேசிய உணவு பதப்படுத்துதல் நிறுவனம்**

2014-15 ஆம் ஆண்டில் உணவு பதப்படுத்தும் துறையில் தொழில் முனைவு பயிற்சி திண்டுக்கல், மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி, சென்னை மற்றும் வேலூர் மாவட்டங்களில் **300** நபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**5.9 மத்திய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தேசிய நிறுவனத்தின் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு பயிற்சிகள்**

மத்திய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனத் துறையின் தொடர்பு முகமையாகிய NI-MSME மூலம் **2014–15** ஆம் ஆண்டில் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியில் அழகு கலை பயிற்சி **30** நபர்களுக்கும், இரு சக்கர வாகன பழுதுபார்த்தல் பயிற்சி **30** நபர்களுக்கும், தோல் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி **30** நபர்களுக்கும், TIG/MIG வெல்டிங் பயிற்சி **30** நபர்களுக்கும், குளிர்சாதன பெட்டி பழுதுபார்த்தல் பயிற்சி **30** நபர்களுக்கும் டெஸ்க்டாப் பப்ளிஷிங்

பயிற்சி 30 நபர்களுக்கும் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி 215 நபர்களுக்கும் மொத்தம் 395 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் பயிற்சியாளர்களுக்கு உரிய வேலை கிடைத்திடும் பொருட்டு "வேலைவாய்ப்பு முகாம் (Talent Mela)" நடத்தப்பட்டது.

## 5.10 கல்லூரிகளில் தொழில் முனைவோர் குறித்த விழிப்புணர்ச்சித் திட்டம்

2014–15 ஆம் ஆண்டில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் 50 பொறியியல் கல்லூரிகள், 62 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என மொத்தம் 112 கல்லூரிகளில் தொழில் முனைவோர் குறித்த விழிப்புணர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளது. தெரிவு செய்யப்பட்ட கல்லூரிகளில் 30,000 மாணவர்களுக்கு இத்திட்டம் பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 3 பகுதிகளாக பிரித்து நடத்தப்படும். இப்பயிற்சித் திட்டம் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் ICT அகாடமி தமிழ்நாடு நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இதுபோன்ற திட்டங்கள் எதிர் வருங்காலங்களில் செயல்படுத்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2014–15–ல், 112 கல்லூரிகளில் முதல் பிரிவு துவக்கப்பட்டது. இப்பயிற்சி 2015–16–ல் முடிவடையும்.

## 5.11 பொறியியல் கல்லூரிகளில் தொழில்நுட்ப காப்பகங்கள் அமைத்தலும், தொடர் ஆதரவு அளித்தலும்

மாநிலத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளில் தொழில்நுட்ப காப்பகம் நிறுவிட, உரிய ஆதரவு அளிக்க தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் முயற்சி

மேற்கொண்டுள்ளது. மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்கள் வாயிலாக மேற்படி தொழில்நுட்பக் காப்பகம் நிறுவப்படும். தொழில்நுட்ப காப்பகங்களுக்கு ஒரு தொடர்பு நிறுவனமாக தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் செயல்பட்டு உரிய தொழில்நுட்ப, நிதி ஆலோசனை மற்றும் இதர ஆலோசனை வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

**5.12 உற்பத்தி திறன் மற்றும் திறமையினை மேம்படுத்திட மேற்கொள்ளப்படும் முயற்சி**

தக்க விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி மாநிலத்தில், நடைமுறையில் உள்ள தொழில்சார்ந்த குழுமங்களில் உற்பத்தி திறனை மேம்படுத்திட, தேசிய உற்பத்தி மன்றத்துடன் இணைந்து செயலாற்றிட தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் முனைந்துள்ளது. 2014–15ஆம் ஆண்டில், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், கும்பகோணம் (எவர்சில்வர் – Stainless Steel – குழுமம்), சென்னை (அச்சுக் குழுமம்), சிவகங்கை (தென்னை நார் கயிறு குழுமம்) மற்றும் தூத்துக்குடி (உப்புக் குழுமம்) ஆகிய குழுமங்களிடையே சிக்கன உற்பத்தித் திறன் குறித்த விழிப்புணர்ச்சி திட்டத்தினை செயல்படுத்தியுள்ளது. மேற்படி குழுமங்களிடையே திறமையையும், உற்பத்தி திறனையும் பெருக்கிட தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் தேவையான சேவைகளை வழங்கிடும்.

**ப. மோகன்**
**அமைச்சர் (ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலன்)**

## குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை
## வரவு–செலவு திட்ட மதிப்பீடு
## கோரிக்கை எண்.44

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்கு தலைப்பு | 2014–15 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு | 2014–15 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு | 2015–16 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 2425. கூட்டுறவு | 1 | 1 | 1 |
| 2851. கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 2841067 | 2050116 | 3037953 |
| 2852. தொழில்கள் | 76563 | 78955 | 82302 |
| 3451. தலைமைச் செயலகம் பொருளாதாரப் பணிகள் | 27595 | 27470 | 28811 |
| 4059. பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு | 150000 | 140000 | 10000 |
| 4425. கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 2700 | 22700 | 0 |
| 4851. கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 501002 | 1002 | 500001 |
| 7610. அரசுப் பணியாளர் முதலியோருக்கு கடன்கள் | 1 | 400 | 1 |
| **மொத்தம்** | **35989** | **2320644** | **3659069** |